விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 கார்த்திகை 20 ரஃ ஆகிர் 3 இதழ் 298

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 6 12-1986

UNIVERSITY OF JAFFNA ... RECEIVED ... PERIODICALS DIVISION ... LIBRARY

## டிக்ஷிற்றுடனான சந்திப்பு

# 'யாழ்.பிரஜைகள் குழு எமக்கு உரியமுறையில் அழைப்புவிடவில்லை'

### மட்டக்களப்பு அம்பாறை பிரஜைகள் குழு

மட்டக்களப்பு, வெள்ளி இந்தியத் தூதுவர் திரு. ஜே என் டிக்ஸிற்றை கொழும்பில் சந்தித்து தமிழ் பிரதேசங்களின் பாதிப்புகள் பற்றி பேச யாழ் பிரஜைகள்குழு விடுத்த அழைப்பை மட்டக்களப்பு, அம்பாறை பிரஜைகள் குழு நிராகரித்துவிட்டது

யாழ் பிரஜைகள்குழு உரிய முறைப்படி தமக்கு அழைப்பு அனுப்பவில்லை என்றும் திரு. டிக்ஸிற்றுடனான சந்திப்பில் பேசப்படும் முக்கிய விவகாரங்களில் அரசியல் கலந்துள்ளதாகவும் அது பிரஜைகள் குழுவிற்கு அப்பாற்பட்டது எனவும் மட்டக்களப்பு, அம்பாறை பிரஜைகள்குழு அழைப்பை நிராகரித்ததற்கு காரணம் கூறியுள்ளது

இதே வேளை மேற்படி பிரஜைகள்குழு இவ் அழைப்பை

[5ம் பக்கம் பார்க்க]

## "சிப்பாய்கள் விடுதலை பற்றி அரசு மௌனம்

# எமது நிபந்தனையிலிருந்து இம்மியளவும் விலகோம்'

## விஜே குழுவினருக்கு கிட்டு' விளக்கம்

(அலுவலக நிருபர்)

**மன்னார் அடம்பனில் நடைபெற்ற போரில் கைது செய்யப்பட்ட இரு இராணுவத்தினரை கையளிப்பது சம்பந்தமாக விடுக்கப்பட்ட நிபந்தனை குறித்து அரசுதரப்பின் கோட்டை இராணுவ அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு பின்னர் மௌனம் சாதிக்கின்றனர் ஆனால் நாங்கள் விதித்த நிபந்தனையிலிருந்து இம்மியளவும் விலகமாட்டோம்; இது உறுதியானது**

தமிழீழவிடுதலைப் புலிகள் அமைப்பின் யாழ் குடாநாட்டுத் தளபதி திரு கிட்டு, உள் நாட்டு, வெளி நாட்டுப் பத்திரிகையாளர்கள், ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப் பிரமுகர்கள், கைது செய்யப்பட்ட இரு சிப்பாய்களின் பெற்றோர், உறவினர்கள் மத்தியில் பேசுகையில் வலியுறுத்திச் சொன்னார்.

யாழ் நகரிலுள்ள பிரதான மண்டபமொன்றில் நேற்றிரவு இச்சந்திப்பு இடம்பெற்றது

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் செயலாளர் திரு விஜயகுமாரணதுங்கா தலைமையில், பௌத்தகுருமார், சம்பந்தப்பட்ட இரு இராணுவத்தினரின் பெற்றோர், உறவினர் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர் உட்பட 120 பேர் மூன்று வாகனங்களில் நேற்றுமாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் வந்து

(5ம் பக்கம் பார்க்க)

### சிறிய காயமே ஏற்பட்டது

தென்னிலங்கையைச் சேர்ந்த பத்திரிகை நிருபர் ஒருவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். குடாநாட்டுத் தளபதி திரு. கிட்டுவிடம் 'உங்கள் கையில் காயம் ஏற்பட்டுள்ளதாக அறிந்தோம். எங்கே என்றார். எனக்கு ஏற்பட்டது ஒரு சிறியகாயம் (என்று தமது கையைக் காட்டி' அது எப்போதோ குணமடைந்து விட்டதே, என்றார் திரு. கிட்டு.

## கட்டிப்பிடித்து அழுதனர்

சிப்பாய்கள் தமது உறவினர்களை சந்தித்தபோது அவர்களின் உறவினர்களை அவர்களை கட்டிப்பிடித்து அழுதமை செயலகமண்டபத்தில் கூடியிருந்த சகலரையும் மனம் நெகிழ வைத்தது.

நாம் இப்போது விடுதலைப் புலிகளுடன் நல்ல நண்பர்களாகியுள்ளோம். அவர்கள் எம்மை நன்றாக உபசரிக்கின்றனர். இவ்வாறுசிப்பாய் ஒருவர் 'விஜே'க்கும் தமது உறவினர்களுக்கும் கூறினார்;

### உறவினர் கருத்துக்கள்

யாழ்ப்பாணம், சனி:

"இதுவரை காலமும் அரசும் அரச சார்பு பத்திரிகைகளும் தென்பகுதி மக்களுக்கு பொய்யையே கூறியுள்ளனர். நாம் இங்கு வந்து எனது மகனைப் பார்க்க சந்தர்ப்பமளித்த 'விஜே'க்கும புலிகளுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்"

இவ்வாறு சிப்பாய் சந்திரசிறியின் தாயார் எமது நிருபருக்குக் கூறினார்.

'இதுவரை அரசு வடபகுதி நிலைபற்றி எமக்கு பொய்ப் பிரச்சாரமே செய்து வந்தது...

(5-ம் பக்கம் பார்க்க)

## விஜே அளவளாவினார்

விஜேகுமாரணதுங்கா நேற்று சிறிதுநேரம் விடுதலைப் புலிகளின் போராளிகளுடனும் தனியாக அளவளாவினார்

யாழ். தளபதி கிட்டு கொழும்பு பத்திரிகையாளர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த போது ஏனையோர் சிப்பாய்கள் உறவினர்கள் சந்திப்பில் லயித்திருந்தகையிலேயே 'விஜே' தனியாகச்சென்று புலிகள் போராளிகளுடன் அளவளாவினார். சுமார் 15 நிமிட நேரம் இச்சந்திப்பு நீடித்தது.

வவனியாவிலிருந்து நேற்றுக் காலை 7-30 மணியளவில் புறப்பட்ட 'விஜே' யாழ் வருமுன்னர் புளியங்குளம், கனகராயன்குளம், முருகண்டி, இரணைமடுச்சந்தி, பரந்தன், பளை ஆகிய இடங்களில்பொது மக்களிடையே உரையாற்றினார்

ஒவ்வொரு இடத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் குழுமிநின்று 'விஜே' பேச்சைக் கேட்டதாக மக்கள் கட்சி அமைப்பாளர் ஒருவர் கூறினார். [ஊ]

### 'விஜே' குழு

மக்கள் கட்சித்தலைவர் விஜேகுமாரணதுங்கா உபதலைவர் ஒஸி அபேகுணசேகர உட்பட சுமார் 5 கட்சி அங்கத்தவர்களும் 30 பிக்குகளும், 8 பத்திரிகையாளர்களும் சிப்பாய்களின் 8 உறவினர்களும் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

### அரச அதிபர்

வவனியா, வெள்ளி

வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. வி. லோகேஸ்வரன் உயர் அதிகாரிகள் குழுசகிதம் இம்மாதநடுப்பகுதியில செட்டிகுளத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

## அனைத்துப் பிக்குகளும் தமிழருக்கு எதிரானவர்களல்ல

[இ. செந்தில்]

"இலங்கையில் உள்ள அனைத்து பிக்குகளும் தமிழ் மக்களுக்கெதிரானவர்களல்ல. தமிழ்மக்களுக்காதரவாக அவர்களின் நிலைபற்றி உணர்ந்து கொண்ட பிக்குகளும் உள்ளனர். இதனை தமிழ்மக்களுக்கு உணர்த்தவே ஒரு நிக்காயாவின் மகாநாயக்கர் உட்பட நாம் இங்கு வந்துள்ளோம்"

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணம் வந்த பிக்குகளில் ஒருவரான வவனியா விகாரையின் பிரதமகுரு வண. சியம்பலகஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னைபற்றி அறிவதே எமது முக்கிய நோக்கம்

[அலுவலக நிருபர்]

யாழ்குடாநாட்டின் நிலைமை பற்றி இந்த அரசாங்கம் எதுவுமே சொல்வதில்லை இதனால் இங்கு என்ன நடக்கிறது என்று தென்னிலங்கை மக்களுக்குத் தெரியாது இரு சிப்பாய்களையும் விடுவிப்பது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தப் போகிறோம் என்று அரசிடம் அனுமதிகேட்டுத்தான் இங்கு வந்தோம்ஆனால் இனப்பிரச்னை பற்றி அறிவதே எமது முக்கிய நோக்கம்.

வட்டபொல அனோமதாஸி கல்யாணவன்ச நிக்காயமகா நாயக்கதேரரே இவ்வாறு குறிப்பிட்ட கருத்தை தெரிவித்தார்

சுபாஷ்விடுதியில் வைத்து

5ம் பக்கம் பார்க்க)

## "ஜீ சி. ஈ. பரீட்சை ஒழுங்காக நடைபெற

# அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்"

### விடுதலைப்புலிகள்

யாழ்ப்பாணம், சனி

"இன்றைய போராட்ட சூழ்நிலையில தமிழ் மாணவர்கள் தம் கல்வியை பல்வேறு இடையூறுகளின் மத்தியிலும் அக்கறை செலுத்தி வருகிறார்கள். இந்நிலையில் தற்போது இடம்பெறும் க. பொ. த. சாதாரண பரீட்சைக்கு எவரும் எவ்வித இடையூறும் விளைவிக்காதிருப்பதுடன் பரீட்சை ஒழுங்காகவும் அமைதியாகவும நடைபெற அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்."

இவ்வாறு தற்போது ஆரம்பமாகியிருக்கும் க. பொ. த. சாதாரண பரீட்சை தொடர்பாக விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கைஒன்றில் கேட்

(5-ம் பக்கம் பார்க்க)

ஹப்பி ரெக்ஸ்ற்

கிளை நிறுவனம்

# இடமாற்றம்

வாடிக்கையாளர்களின் பாதுகாப்பையும் நன்மையையும் கருதி 1-ம் கட்டிடம் நவீனசந்தைமேல் மாடியில் உள்ள எமது கிளை 05-12-86 தொடக்கம் ஸ்ரான்லி ரோட்டிற்கு [V. K. ராஜரட்ணத்திற்கு நேர் முன்பாகவும், விக்ரர் அன்சன்ஸிற்கு அருகிலும்] இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

# ஹப்பி ரெக்ஸ்ற்

இல. 104, ஸ்ரான்லிரோட், யாழ்ப்பாணம்.

## இந்திய சமாதானத்துக்கும், நீதிக்குமான நிலையத்தின்

# மூன்று அங்கத்தவர் குழு இலங்கைக்கு விஜயம்

(சென்னை)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக ஒரு தேசிய ஆலோசனையை நடத்தவென நவம்பர் 27 முதல் 29-ம் திகதிவரை நடைபெற்ற இந்திய சமாதானத்துக்கும், நீதிக்குமான நிலையம் மூன்று அங்கத்தவர்கள் கொண்ட தூதுக் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பவுள்ளது.

இலங்கை இனப்பிரச்னைக்கு ஒரு நியாயமான தீர்வு காண்பதற்குச் சிங்கள மக்கள் மத்தியில் பொதுசன அபிப்பிராயத்தை ஊட்டுவதற்கு இவர்கள் நடவடி

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Reconditioned Honda C 90 Chaly மோட்டார் சைக்கிள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு தொடர்புகொள்ளவும்: A S B Trade and Engineering, 12, Nallur Cross Road, Nallur, Jaffna
C 6184

நல்ல நிலையிலுள்ள Sisil R80, குளிர்சாதன பெட்டி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: சண்முகநாதன், 13/1 ChettySt Lane, Nallur, Jaffna
C 6185

பல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. அத்துடன் தென்னை பாம் கன்றுகள் (Cane palm) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு தொடர்பு: "இரத்தினவாசா", சருவேலடி லேன், (பழைய புகையிரத வீதி), சொக்குவில் கிழக்கு
C 6102

தளபாடங்கள், தேக்கு, ஸ்ரீல், வேம்பு அலுமாரிகள், கட்டில்கள். Show case, விக்லியர்ஸ் தண்ணீர் இறைக்கும் இயந்திரம்-Water Pump, சிங்கர் Zig Zag மெஷின், வயலின், பெல்ஜியம் கண்ணாடிகள், Electric Fan, English Type writer, Pyrex கிளாஸ் வகைகள் உடன் விற்பனைக்கு M. Thiagarajan, 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
C 6193

ரோசாச் செடிகளுக்கேற்ற விஷேச "ரோசா உரம்" விற்பனைக்குண்டு. M. G M and Stores 781, K. K S Road and 208 1st Cross St, Jaffna T. P. 22611. (C 5072)

Broiler and Soup Chicken இறைச்சிக் கோழிகளும், விருத்துக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. Nallur Farm Centre, (நல்லூர் வீடியோ செண்ரர்), 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். C 6053

வடலியடைப்பு கும்மந்தவத்தை வாசிகசாலைக்கு அருகாமையில் 4 பரப்புக் காணி வீடு. மின்சார, நல்ல குடிநீர் வசதியுடன் நல்ல சுற்றுடல் உடன் விற்பனைக்கும் அத்துடன் 4 பரப்பு இரண்டு வீடு கட்டக்கூடிய காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ. சி இராசையா (J P), வடலி அடைப்பு, பண்டத்தரிப்பு
C 6186

சுன்னாகம் மதவடி லேனில் 3 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்குண்டு: க. கதிரவேல், வேல்ஸ் லோன்றி. வளாகசந்தி, திருநெல்வேலி.
(C 6179)

மெய்கண்டான் கலண்டர், டயறிகள் பெருந்தொகையாக விற்பனைக்குண்டு, வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். விலை No 1 - 29.50 No 2 - 27 50 மகிமிலன் புத்தகசாலை 3 பஸ் நிலையம் யாழ்ப்பாணம். (C 6165)

வீட்டுப் பாவனைப் பொருட்கள், தளபாடங்கள், Foam றபர்மெத்தைகள் சிங்கர்,Oven Usha தையல்மெஷின்கள், T V. ஹோல் செற் Steel Almirah, Office Table, Electric Cooker, கிளாஸ் வகைகள். Vedeo Deck Ceygma Water Pump. Dressing Table பெல்ஜியம் கண்ணாடியுடன், Formica சாப்பாட்டு மேசை, வயலின், Show case, மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [C6136]

## விற்பனைக்கு

புதிய 3 ஸ்ரார் ஓடு 2500 பழைய இந்தியன் ஓடு 1000 விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: சுகலக்ஷ்மி ஸ்ரோர், மாட்டீன் ரோட், யாழ்ப்பாணம். C 6174

புதிய நான்குதட்டு அடுப்புடன் (Oven) வீடியோ டெக், கஸட் மின்சார உபகரணங்கள் தையல் மெஷின் சாதாரண வீட்டு பாவனைக்குகந்த பொருட்கள், கண்ணாடி மற்றும் விளையாட்டுப் பொருட்கள் ஆங்கில தமிழ் புத்தகங்கள் விற்பனைக்குண்டு பார்வையிடும் நேரம் மு ப 9 00 பி ப. 5-00 மணிவரை தொடர்பு: எம் சுந்தரமூர்த்தி 110, சாம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு. C-6160

## தேவை

அனுபவமும், திறமையும், உடைய பெண் ஜவுளி விற்பனையாளர் தேவை. உடன் நேரில் வரவும். இல 2, நவீன சந்தை' மேல்மாடி, திருநெல்வேலி. C 6191

Typist Cum Clerk ஆங்கில, தமிழ் தட்டெழுத்தில் நல்ல தேர்ச்சியுள்ள A/L விஞ்ஞானம் படித்தவர்கள் தமது சொந்தக் கையெழுத்தில் 10-12 86 இற்கு முன் விண்ணப்பிக்கவும் Bond Institution, 58A ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். C 6123

ஆங்கில அறிவுடைய லிகிதர் தேவை எங்களுடைய ஸ்தாபனத்திற்கு இரண்டு மைல் தொலைவிற்குள் வசிப்பவராக இருக்கவேண்டும். குறைந்தது கல்விப் பொதுத் தராதரம் (உயர்கல்வி) கொமேஸ் படித்தவர் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும்: யாழ் ஏசனீஸ் றெஸ்ரோறன்ற் 124, R R நல்லையா வீதி, யாழ்ப்பாணம்.
C 6175

## வாடகைக்கு

18' நீளம் 13' அகலம் கொண்ட பிளாட் பண்ணப்பட்டுள்ள இரண்டு கடைகள் சிவன்பண்ணை வீதியில் வாடகைக்கு உண்டு. தொடர்பு: S சிறீகாந்தன் 175, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
C 6163

## வகுப்புக்கள்

English Assistant Teachers பரீட்சை 20 மீட்டல் வகுப்புகள் கடந்த கால வினாத்தாளுடனும் மேலும் பயிற்சிப் புத்தகங்களுடனும் ஆரம்பம்! 8-12-86 காலை 10 - 11/30 வரை S. B Jyar 12, வைமன் வீதி, நல்லூர். C 6114

Home Science, (மனையியல் டிப்பிளோமா) Montessori Teachers Training (Diploma Courses ,(பாலர்பயிற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. புதிய வகுப்புகள் ஜனவரி முதல் வாரத்தில் ஆரம்பமாக உள்ளன 20-12-86 க்கு முன் நேரில்விண்ணப்பிக்கவும். அதிபர். உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
C 6172

G.S Q. B Sc (Bio), G.AQ, B A நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. G S Q (Bio), B Sc New Batch 87/88, G S Q (Maths, Pure Applied, Stats) ஜனவரி முதல் வாரத்தில் ஆரம்பமாக உள்ளன 20-12-86 க்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும். அதிபர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## கல்வி

புதிய Radio T V Electronic, Automobile Engineering. Airconditioning and Refrigeration Draughtsman வகுப்புகள் ஆரம்பம். சிறந்த சான்றிதழ்கள் வழங்கப்படும். டெக்னிக்கல் என்ஜினியறிங் இன்ஸ்ரிரியூட்,லை லட் சென்ரர், 151, செம்மணி ரோட், நல்லூர் (முத்திரைச் சந்தியிலிருந்து கல்விக்கந்தோருக்குச் செல்லும் வீதி). C 6188

### மானிப்பாய் கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய்.

## பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள தற்காலிக தட்டெழுத்தாளர் (தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் தட்டச்சு ஆற்றல் உள்ளவர்) பதவிக்கு 16 - 12 - 86 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பப் படிவத்திற்கும் மேலதிக விபரங்களுக்கும் சங்க காரியாலயத்தில் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்.
A-3194

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## 1987-ம் வருடத்திற்கான சோலைவரி மதிப்பேடுகள்

1987-ம் வருடத்திற்கான மாநகராட்சி மன்ற சோலைவரி மதிப்பேடுகள் தற்பொழுது ஆயத்தமாக, யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் (சோலைவரிப் பகுதியில்) அலுவலக நேரத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதாக 252 ஆம் அத்தியாயமான) மாநகராட்சி மன்ற கட்டளைச் சட்டத்தின் 235(1) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர சி மன்ற
ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற,
அலுவலகம்,
யாழ்ப்பாணம். A 3196

### உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

## கேள்விப்பத்திர அறிவித்தல்

(அ) மேற்படி சங்கத்தில் உள்ள 26 ஸ்ரீ 6568 என்னும் இலக்க டீசுசு லொறிக்கு உருவம் அமைக்க மீண்டும் விண்ணப்பம் கோரப்படுகின்றது

(ஆ) 26 ஸ்ரீ 6568-ம் இலக்க லொறியில் தற்போழுது உள்ள உருவம் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கு உண்டு.

விண்ணப்பம் அனுப்ப விரும்புவோர் மேலதிக விபரம் தேவைப்படின் பொது முகாமையாளருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். இதற்கு சங்கத்தல் வெளியிடப்பட்டுள்ள படிவத்தில் மாத்திரம் விண்ணப்பம் அனுப்பவும்.

போதிய கேள்விப்பத்திரங்கள் கிடைக்காதபடியால் மீண்டும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பம் அனுப்பும் கடைசித்திகதி 16 -12 - 86.

பொது முகாமையாளர்,

### சுன்னாகம் பல நோ கூ. சங்கம் (வரைவுள்ளது) சுன்னாகம்.

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தில் 4000ற்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள், கழிவு மா, கழிவு சீனி, வெற்றுபரல், வெற்று சீமெந்து பை ஆகியன கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச் சாக்குகளுக்கு மீளளிப்பு வைப்புப்பணமாக ரு 250/-ம், ஏனையவற்றுக்கு ரு 50/-ம் சங்கத்தில் செலுத்தி. கேள்விப் பத்திரங்களைச் சங்க வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

12-12-86 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்.
சுன்னாகம்
பல நோ கூ. சங்கம்,
சுன்னாகம். (A 3195)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

### சண்முகம் கருணாரெட்ணம்

தோற்றம்: 02-09-34
மறைவு: 16-12-85
திதி: 6-12-86

ஓராண்டு ஆகினவே ஆசைமுகம் பார்த்தும், உன் இனியமொழி கேட்டும், கணப்பொழுதில் எம்மைவிட்டு ஈசன அடி சேர்ந்துவிட்டாய்

துயர் ஆற்றுக
அன்பு மனைவி மக்கள்,
அக்காமார்.
"கணேகிரி",
இருபாலை,
கோப்பாய். (C 6080)

## விலைகுறைப்பு

உடன் உரித்த
புறொயிலர்
கோழி இறைச்சி
1 Kg — 52/-
விற்பனையாகின்றது.
வரணி மிசன்
விற்பனை நிலையம்
145, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.
A-3222

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சண்முகம் கருணரத்தினம்

மண்ணுலகம்: 2-9-1934
விண்ணுலகம்: 16-12-1985
திதி: 6-12-1986

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.
சகோதரிகள்,
உறவினர்கள்.
உரும்பராய் தெற்கு,
உரும்பராய். (C 6181)


## சேவை

ஸ்ரூடியோ நித்யசித்ராவின்
வீடியோ படப்பிடிப்பு

விழாக்கள் அனைத்தும் சிறந்த முறையில் எடுப்பதற்கு ஆயத்தமாகியுள்ளது
ஸ்ரூடியோ நித்யசித்ரா, சங்கானை.

மற்றும்: வண்ணப்படச்சுருள் கழுவித்தருவதில் விரைவு,
பிலிம்றோல்கள், அல்பங்கள் விற்பனை.
பிறேம்கள் செய்தல்
அனைத்துக்கும் அழைக்கின்றது:

ஸ்ரூடியோ நித்யசித்ரா,
பிரதான வீதி, சங்கானை
C.6018

# JAYAN

தளபாடத் தேவை எதுவாய் இருப்பினும், கவர்ச்சி வண்ணத்தில், ஆயுள் பூராவும் நீடித்து உழைக்கக் கூடிய வலுவான உருக்கினாலான JAYAN தயாரிப்புகளையே வாங்குங்கள்.

★ STEEL CUPBOARD (3 அளவுகளில்)
★ OFFICE TABLE
★ DINNING TABLE
★ FILING CABINET
★ STEEL BED
★ T. V. STANDS
★ COUNTER TABLE

மற்றும் சகலவிதமான தளபாடத் தேவைகளுக்கும் வடமராட்சிப் பகுதியில் எமது ஏகப் பிரதிநிதிகள்:
கட்டைவேலி - நெல்லியடி [ப.நோ. கூ. சங்கம்]
யாழ்நகரில்

Dilka Furniture Palace ★ Expo Furniture Palace
234, 236, K K S. Road, Jaffna. | K. K S. Road, Jaffna.
(C6208)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1983-ல் கிரெனடா பிரதமர் கொலை:

# 14 அரச, இராணுவ உயர் அதிகாரிகளுக்கு

# மரணதண்டனை!

லண்டன், டிச - 5

கரீபியன் தீவான கிரெனடாவில் அரசாங்க, இராணுவ முக்கியஸ்தர்கள் 14 பேருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது கிரெனடா உயர்நீதி மன்றம் முன்னாள் பிரதமர் மொரிஸ் பிஷப் கொலை தொடர்பாக இத்தண்டனையை நேற்று விதித்தது.

1983-ம் ஆண்டு சதிப்புரட்சியொன்றில் கிரெனடா தீவின் பிரதமரான திரு மொரிஸ் பிஷப்பும், அவரது சகாக்கள் பத்துப்பேரும் சதியாளர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதனையடுத்து அமெரிக்கப் படைகள் இத்தீவினுள் படையெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இடதுசாரிச் சக்திகளே பிரதமர் மொரிஸ் பிஷப்பை அன்று கொலை செய்திருந்தன என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

மொரிஸ் பிஷப் கொலை தொடர்பான விசாரணைகளின் முடிவில் கிரெனடா உயர்நீதி மன்றம், திரு பிஷப்பின் முன்னாள் உதவியாளர் உட்பட அரசாங்க இராணுவ முக்கியஸ்தர்கள் 14 பேருக்கு மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

3 பேர் இவ்வழக்கில் 45 வருடகால சிறைத்தண்டனை பெற்றனர். ஒருவர் விடுதலை செய்யப்பட்டார்.

## சகோதரர் காலமானார்

# ஜனாதிபதி ஸெயில் சிங் சொந்த ஊருக்குப் பயணம்!

புதுடில்லி, டிச 5

இந்திய ஜனாதிபதி ஜியானி ஸெயில்சிங்கின் மூத்த சகோதரரான ஜ. ஜித்சிங் காலமானார். இவரின் மரணச் சடங்களில் கலந்து கொள்ளும் பொருட்டு ஜனாதிபதி ஸெயில் [6ம் பக்கம் பார்க்க]

## ஈரான் இரகசிய ஆயுத வினியோகம்:

# 'வாட்டர்கேட்' பாணியிலான விசாரணைக்கு காங்கிரஸ் முடிவு

வாஷிங்டன், நவ 5

'வாட்டர்கேட்' விசாரணைப் பாணியில் ஈரானுக்கான இரகசிய ஆயுத வினியோகம் தொடர்பாக விசாரணை நடத்த அமெரிக்க காங்கிரஸ் முடிவுசெய்துள்ளது.

அமெரிக்கக் காங்கிரஸில் (பாராளுமன்றம்) உள்ள செனட்சபை, பிரதிநிதிகள் சபை ஆகிய இரண்டு சபைகளினதும் தலைவர்கள் இவ் விசாரணைக்கு உடன்பட்டுள்ளனர்.

காங்கிரஸினால் அமைக்கப்படவுள்ள விசாரணைக்குழுவில் ஜனநாயகக்கட்சி சார்பில் 6 பேரும், குடியரசுக்கட்சி சார்பில் 5 பேரும் அங்கம் பெறுவார்கள் அடுத்தஆண்டு ஜனவரிமாதம் இறுதிப்பகுதியில் விசாரணை ஆரம்பமாகும்.

இதேவேளை அதிபர் ரீகனின் உத்தியோக பூர்வ பேச்சாளரான திரு, லாரிஸ் பீக்ஸ் ஜனவரிமாதம் தமது பதவியை இராஜினமாச் செய்யப்போவதாக அறிவித்துள்ளார்.

ஈரான் இரகசிய ஆயுதவினியோகத்துக்கும் தமது இராஜினமா வுக்கும் எதுவித தொடர்புமில்லை என்று திரு. ஸ்பீக்ஸ் தெரிவித்துள்ளார்

தனிப்பட்ட முறையில் தொழில் நிறுவனமொன்றில் பதவிவகிக்கும் வகையிலேயே தாம் இராஜினமா செய்ய விருப்பதாக அவர் கூறினார்

இது இவ்வாறிருக்க திரு ரீகனின் ஈரானுக்கான இரகசிய ஆயுத விநியோகம் குறித்த விவகாரம் அமெரிக்காவில் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. ரீகன் நிர்வாகத்தில் உயர்பதவிகளிலுள்ள மேலும் பலர் இராஜினமாச் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. ரீகனின் தேசிய பாதுகாப்புத்துறை ஆலோசகர் திரு பொயின்ட் டெக்ஸ்ரர் ஏற்கனவே தமது பதவியைத் துறந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை இனப்பிரச்னை:


# விரைவில் தீர்வு ஏற்படுமென சோவியத் நம்பிக்கை

சென்னை, டிச 5

இலங்கை அரசியல் வரலாற்றில் பாரிய ஒரு பிரச்னையாக கருதப்படுகின்ற இலங்கையின் இனப்பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணப்படுமென சோவியத் யூனியன் நம்புவதாக இந்தியாவுக்கான சோவியத் தூதுவர் கே எஸ் செனல் சடந்திங் என்று தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு என். டி. திவாரி சோவியத்தூதுவரிடம் இலங்கை இனப்பிரச்னை பற்றி கலந்துரையாடிய போதே சோவியத் தூதுவர் மேற்படி கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ''இலங்கையில் நிலவும் இனப்பிரச்னை இலங்கையின் உள்நாட்டு விவகாரமாகும். இலங்கையினாலேயே அது தீர்த்துவைக்கப்பட வேண்டும். ஆயினும் இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகள் இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வு காண உதவியாக அமையலாம் என சோவியத் யூனியன் நம்புவதாக சோவியத் தூதுவர் தெரிவித்தார். (ஏ)



சோவியத் அதிபர் திரு. . மிக்கேல் கொர்பச்சேவ் தமது இந்திய சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடமிருந்து விடைபெறுவதை படத்தில் காணலாம் திருமதி ரெய்ஸா கொர்பசேவும் அருகே காணப்படுகிறார். இந்தியச் சிறுமிகள் இருவர் கொர்பச்சேவ் தம்பதிகளுக்கு பிரியாவிடை அளித்து மலர்க்கொத்துக்களை வழங்கிநிற்கின்றனர்.


இலங்கையில் முதல் முதலாக

தேசிக்காய் வாசனையுடன்




எம்டீ சோப்




115g ரூபா 2/-




650g ரூபா 12/00

இதே விலையில் இதைவிட சிக்கனமானதும் சிறந்ததுமான வேறெரு சவர்க்காரம் வாங்க முடியுமா...... இன்றே வாங்குங்கள்

புதிய எம்டீ சோப்

எம்டீ என்ரபிறைஸ்,

14, 16, கைத்தொழிற்பேட்டை – அச்சுவேலி.



முகவர் நிலையங்களுக்கான அங்கீகாரத்துடன் குடாநாட்டில் தொடர்ந்தும் சேவையாற்றுகின்றோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பிரயாண ஒழுங்குகள்

*டென்மார்க் *கனடா
*லண்டன் (U. K.) ★ஜேர்மனி

ஆகியநாடுகளுக்கு எமது முகவர் உடனுக்குடன் உங்களை அழைத்துச் செல்வார்.

சவூதி, குவைத்

கிளீனேர்ஸ், Gardeners, Labourers, Drivers இருப்பிடமும் சாப்பாட்டு வசதிகளுடனும் வருமான ஒழுங்கு கூடிய கெதியில் செய்துதரப்படும்.

சிங்கப்பூர், குவைத்

பெண்களுக்கு வருமான ஒழுங்குகள் இருப்பிடமும் சாப்பாட்டு வசதியுடன் துரித கதியில் செய்து தரப்படும்.

பாஸ்போட். பொண்ட் (BOND), விசா, ரிக்கற் முதலியன துரித கதியில் செய்து தரப்படும்.

GROUP ATLANTIC TRAVELS

இல. 163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோவில் முன்பாக) [A3223]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

"எய்ப்பு என்னை வந்து நலியும்போது அங்கு
ஏதும் நான் உன்னை நினைக்கமாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன்
அரங்கத் தரவணைப் பள்ளியானே."

—பெரியாழ்வார்

# நமது நோக்கு

## பண்புடையார் கண்ட உலகம்

சுமார் 25 வருடங்களுக்கு முன் புதுடில்லியின் கம்பீரமான விஞ்ஞான பவான் மண்டபத்தில் நடைபெற்ற பெரும் வைபவமொன்றில் பாரதப்பிரதமர் ஜவஹர்லால் நேரு மனக்கசப்புடன் சொன்னார், "காசு கதறிக்கொண்டிருக்கிறது; ஆனால் பேரறிவு முசுமுசுக்கிறது" ஏன் என்ற வினாவையும் எழுப்பியிருந்தார்.

இன்று அவருடைய பேரன் பாரதப்பிரதமர் ராஜீவ் காந்தி, பஞ்சாப் படுகொலைகளால் கலக்கமடையவில்லை; நாட்டின் புராதன அறவொளி மங்கிப்போகின்றது; அதனைப் புதுப்பிக்கும் பணியில் மாநிலங்கள் அனைத்தும் ஒன்றுபட வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்.

பாரதத்திற்கு இந்த விண்ணப்பம் எவ்வளவு அவசியமோ, இலங்கைக்கும் அது அவ்வளவு அவசியமென்று கருதுகின்றோம். இதற்கு மிகப்பொருத்தமான தினமே இன்று; சேர். பொன்னம்பலம் இராமநாதன் குருபூசைத்தினமாகும்.

நாட்டின் புராதன ஒளி என்றதும் பழமை பேசும் பேர்வழிகள் என்று விழுந்தபாட்டிற்குக் குறிசுடும் பேதைகள் இன்று ஏராளம்; அதுவே அறம் என்பது, என்னவென்று மதிப்பிட முடியாத அறிவிலிகள் நிலை.

கலை, கலாசாரம், பண்பாடு என்றால் இன்று இந்த நாட்டில் மட்டுமல்ல, இவற்றிற்குத் தாயகமெனக்கருதப்படும் இந்தியாவிலேயே ஒரு கொண்டாட்டம், திருவிழா என்ற அளவிற்கு சுருங்கிவருகிறது.

அமெரிக்காவில், பாரிஸில், இன்று டில்லியில் இந்தியப் பண்பாடு பெருந்திருவிழாக்கள் மூலம் விளக்கப்படுகிறது. இவை அனைத்திலும் காசே கதறிற்று. இவற்றால் மனித சமுதாயம் கண்ட அறவாழ்வு, இன்றும் அழியாத நிலையில் தப்பி இருக்கும் இந்தியப் பண்பாடு. இக்கால மக்களின் வாழ்வில் ஏற்றம் பெறுகின்றதா?

பேரறிவு பலத்துப் பேசாதிருப்பதற்குக் காரணம் என்ன? இன்றைய கல்வி, கலை, கலாசாரம் என்றும் அழியா ஆன்மிகக்கோட்பாட்டில் அமையவில்லை.

பேரறிஞர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் நாகரிக வாழ்வின் நிலைப்பேற்றை குறிப்பிடும்போது; "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்" என்ற பொய்யாமொழியின் கருத்தை முன்வைத்திருக்கிறார். அவர்களின் வரலாறே தத்தம் நாட்டிற்கு அவர்கள் அளித்த அருஞ்செல்வமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

தங்கள் வாழ்வை துச்சென மதித்து பிறருக்காக வாழ்ந்தவரே, மானிடவாழ்வின் மேன்மையை விளக்க வல்லவர். சிறந்த அரசியல் ஞானி சேர். பொன்னம்பலம் இராமநாதனின் வாழ்வும் சாதனைகளும் இதற்குச் சான்றாகும்.

இன்று தமிழ் மக்களை யும், தேசத்தையும் எதிர்நோக்கும் நெருக்கடியைக் கருத்தில்கொண்டால் உண்மைத் தேசபக்திற்கு வித்திட்ட நாவலர் பெருமானும் அவருடைய சீடனைப் பணிபுரிந்த சேர். பொன்னம்பலம் இராமநாதனும் மக்களின் வருங்கால வாழ்வுக்கு குறிப்பாகத் தமிழ் மக்களின் சுபிட்சத்துக்கும் ஆற்றிய பணி என்றும் அழியாதென்பது புலனாகும்.

மொழி சமயம் என்ற இரண்டும் ஒரு சமுதாயத்தின் அளப்பரிய சக்திகள்; அவற்றைப்பாதுகாத்துப் பேணிய வீரர்கள், மக்களின் அழிவைத் தடுக்கப் போர் புரியும் படைவீரர்களிலும் பன்மடங்கு மேலானவர்கள்.

மெல்லமெல்லத் தமிழ்மொழி இறந்துபோமென்றவரும், ஆலயம் தொழுவது வேலையினைக்கேடு என்று இன்றும் வேலி செய்பவரும் இக்கால சேர்க்கை உலகில் மிதக்கும் மாரிமன்னரே!

ஞானிகளும் யோகிகளும் காட்டிய அறவழியில், மக்கள் சமுதாயம் செழிப்புறவேண்டுமென்ற சேர். பொன். இராமநாதனின் பணி நாடனைத்திற்கும் கிடைத்தது.

சிங்கள மக்களை சிங்களத்தில் பேசவும், படிக்கவும் உற்சாகப்படுத்திப் பேசியபேச்சு. இன்று நூற்றாண்டு நிறைவுவிழா வைக் கொண்டாடிய கொழும்பு ஆனந்தாக்கல்லூரியில் அன்று அதன் பரிசளிப்பு விழாவில் நிகழ்த்திய பேருரையாகும்.

மொழியே ஒரு மக்களின் உயிரென்பதும் அதனை ஊக்குவிக்கும் ஆன்மா சமயமென்பதும் இக்காலப்பகுத்தறிவாளருக்குப் பரிகாசமாக இருக்கலாம்.

அவர்கள் எழுப்பும்கோஷமும், கூச்சலும் அமர்ந்தபின் நிலைத்து நிற்கும் இந்தப் பேருண்மையை உணரும் அரசியல் ஞானம் உதயமாகும். தமிழ், சிங்கள, இஸ்லாமிய மக்கள் சமுதாய ரீதியில் தத்தம் தனிசிறப்பைப்பேணுவதிலேயே உண்மையான தேசியம் இந்த நாட்டில் வேரோடுமென்பதை உணர்வார்கள்.

தமிழ் மக்களின் தாயகம், அவர்களின் தந்தையர் நாடு, ஒற்றை ஆட்சி, சமஷ்டி அமைப்பு - இவை போன்ற வாய்ப்போராட்டங்கள் அனைத்தும் முட்டாள்தனம் என்கிறார் ஆங்கிலப்புலவர் அலெக்ஸாண்டர்போப். தேசமில்லாது தேசியமேது என்பதை எவரும் அறிவார்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில், அனைத்திலங்கையின் முடிசூடா மன்னன் போல் மதிக்கப்பட்ட சேர். பொன். இராமநாதனின் சாதனைகள் இன்றைய நெருக்கடியை நீக்கவல்ல படிப்பினைகள் என்று அறிக.

## சேர் பொன் இராமநாதனின் பொருளாதார சிந்தனைகள்

# வட பகுதி துறைமுக அபிவிருத்தியில் அவருக்கிருந்த அக்கறை

### வே. ந. சிவராசா

தொன்மைமிக்க துறைமுகங்களைத் திறந்து பயன்படுத்தல் இராமநாதன் அவர்களின் பொருளாதாரத் திட்டத்தில் ஒரு ஆணித்தரமான அம்சமாகத் திகழ்ந்தது. வருங்கால வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கின்ற இன்றைய சூழ்நிலையில் துறைமுக வளர்ச்சி பற்றிச் சிந்தித்தல் நல்லது. கடல் வளம்பெருகவும், வணிகம் வளரவும், கமதொழில், கைத்தொழில் ஆகியன துரித அபிவிருத்தியடையவும் பண்பாட்டுத் தொடர்புகள் ஏற்படவும் துறைமுகவளர்ச்சி வேண்டத்தக்கதொன்றாகும்.

1914-ம் ஆண்டு அதாவது இற்றைக்கு எழுபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆடி மாதம் 20 ஆம் திகதி அன்றைய சட்டசபையில் ஊர்காவற்துறையில் மக்கள் இறங்குவது மற்றும் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவது பற்றியும் வினா எழுப்பியவர் இராமநாதன். வடமாகாணத் துறைமுகங்களாகிய பருத்தித்துறை, காங்கேசன்துறை, ஊர்காவற்துறைதுறைமுகங்களில் தொன்மையையும் பெருமையையும் எடுத்தியம்பி இந்தியாவிலிருந்து வரும் கப்பல்கள் பத்துநாட்கள் துறைமுகத்திற்கு வெளியில் தங்க வேண்டும் என்னும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை வலுவாகக் கண்டித்தார் தலைமன்னார் ஊடாகப் பயணம் செய்வதால் ஏற்படும் செலவு சிரமம் ஆகியவற்றினைத் தக்க புள்ளிவிவரங்களுடன் எடுத்து விளக்கினார்.

நான்கு அல்லது ஐந்து மணித்தியாலயங்களில் முழுப் பயணத்தையும் முடித்துவிடும் ஒரு கப்பல் பதினொருநாட்கள் நோய்த்தடுப்புச் சாட்டில் நிறுத்தப்படும் ஒழுங்கு விதிகள் விளைவிக்கும் சிரமத்தையும் அநீதியையும் மிகவும் தெளிவாகச் சட்டசபையில் எடுத்துரைத்த இராமநாதன் பாதிவெற்றி மட்டுமே கண்டார். அதாவது பொருட்கள் மட்டும் வடமாகாணத் துறைகளில் இறக்க அனுமதி கிடைத்தது.

மக்கள் இறங்குவது பற்றி "Plague Comittee" என்ற நோய்த்தடுப்புக் குழுவின் விதந்துரை சாதகமாக இல்லாததால் அனுமதி கிடைக்கவில்லை.

"மண்டபம்" என்னும் இடத்தில் இருப்பது போன்ற ஓர் நோய்த்தடுப்புப் பாசறையை ஏற்படுத்தும் யோசனை முன்வைக்கப்பட்டு ஆராயப்பட்டது. 1914 ஆம் ஆண்டு முதலாவது உலக மகாயுத்தம் தொடங்கியதால் அது நிறைவேற்றப்படவில்லை.

இன்று இச் சிந்தனைகளைப் புதிய காலகட்டச் சூழ்நிலையில் இன்றைய மருத்துவ விஞ்ஞான வளர்ச்சியினைப் பயன்படுத்தியும் திட்டமிடல் வேண்டும். இராமநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் இரண்டு நூல்களில் ஆக்கித்தந்த உயர் திரு. எம். வைத்திலிங்கம் அவர்கள் (Reopening of the northern Ports) என்னும் பாடத்தில் 21 பக்கங்களில் தந்துள்ள விவரங்களை இன்றைய சந்ததியினர் படித்தறிதல் வேண்டும். மேலும் (9 - 11 - 1986) ஈழநாடு வாரமலரில் திறமையும் பழுத்த அனுபவமும் மிக்க அபிவிருத்தி நிருவாகியான மாணிக்க இடைக்காடர் அவர்கள் இவ் விடயம்பற்றிக் குறிப்பிட்டது திட்டமிடுவோர் அறிய வேண்டிய விடயம். அது பின்வருமாறு:-

"வடபகுதித்துறை முகங்களை முன்னேற்றத்திற்குச் சில விடயங்களை எங்கள் மனதில் வைத்திருப்பது நல்லது: உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒன்று வங்காள விரிகுடா நாடுகளில் வசிக்கிறார்கள். சிலகாலமாக சுயேஸ் கால்வாய், பனமா கால்வாய் போல தாய்தாந்தில் (Isthmusofkra) மலேசியாவுக்கு வடக்கே ஒருவாய்க்கால் வெட்டுவிப்பதற்கு யோசனையுண்டு. இந்த வாய்க்கால் வெட்டினால் சீனா, ஜப்பான் மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு சிங்கப்பூர் வழியாகக் கப்பல்கள் செல்லாமல் இந்த குறுக்குவழியால் செல்லலாம். இது கைகூடினால் காங்கேசன்துறை, பருத்தித்துறை, திருமலை போன்ற துறைமுகங்கள் மிகவும் பிரசித்திபெற வாய்ப்புண்டு. இப்படிப்பட்ட வாய்ப்புக்கு எங்களை இப்பவே தயார் செய்யவேண்டும்"

சட்டசபைப் பேச்சுக்களை ஆர்வங் கொண்ட மாணவர்களுக்காகவென்றே பொருளாதாரத் துறையில் இராமநாதனின் இப்பங்களிப்பு கவிஞன் முல்லைமணி அவர்களைக் கவிதை செய்யத்தூண்டியது: துறைமுகவளர்ச்சி பற்றி முல்லைமணி அவர்கள் 28-11-84 அன்று இராமநாதன் கல்லூரி நிறுவுநர் நாள் கவியரங்கில் அரங்கேற்றிய பாடல்களில் ஒன்று வருமாறு:

வடஇலங்கை தனிலமையும்
துறைமுகங்கள்
வழக்கம்போல் இயங்காமல் தடையைச் செய்து
விடுவதற்கு ஆட்சியினர்
முயன்றபோது
வாதுசெய்து அவற்றையே
திறக்கச் செய்தாய்
திடமுடனே அரசினரை
எதிர்த்து நீதி
திகழவைத்தாய் நின்றனது தேசசேவை
கடமையுணர் வத்தனையும்
வியந்து நின்றோம்
காவியத்தின் நாயகனே
வாழி வாழி

## இன்று
## பொன். இராமநாதன் குருபூசை

யாழ்ப்பாணம், சனி

சேர். பொன் இராமநாதன் குருபூசை இன்று யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் இடம்பெறும். பரமேஸ்வரா ஆலய ஆளுநர் சபையும், பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றமும் இக்குருபூசைக்கு ஏற்பாடு செய்துள்ளன.

## முத்துமாரி அம்பாள் திருவெம்பாவை

யாழ்ப்பாணம், சனி

திருநெல்வேலி அருள்மிகு முத்துமாரி அம்பாள் கோவிலில் இம்மாதம் 8ம் திகதி திங்கட்கிழமை அதிகாலை திருவெம்பா பூசை, புராண படனம் முதலியன ஆரம்பமாகின்றன.

16ம் திகதி காலை 8-00மணிக்கு ரதோற்சவமும், மறுநாள் அதிகாலை விசேட அபிஷேகம், பூசை, தீர்த்தோற்சவம் முதலியன நிகழும். (ப)

# "மாணவர்க்கு படிப்பதற்கான வசதியை பெற்றோர் செய்யவேண்டும்"

## பாராட்டுவைபவத்தில் கருத்து

உடுவில், வெள்ளி

"மாணவர்களுக்கு படிப்பதற்கான வசதிகளை செய்து கொடுப்பது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாகும். அதனை நல்லமுறையில் பயன்படுத்தி கொள்வதும், நெறிப்படுத்தி வைப்பதும் மாணவர்களதும் ஆசிரியர்களதும் கடமை".

இவ்வாறு மல்லாகம் மாவட்ட நீதவான் திரு. விக்கினேஸ்வரன் கூறினார்.

மானிப்பாய் கல்வி வட்டாரத்தில் ஆறும் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாவர்களுக்கான பாராட்டு வைபவத்தில் அவர் உரையாற்றினார்.

மானிப்பாய் வட்டாரகல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் தலைமையில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இவ் வைபவத்தில் கல்வி அதிகாரி பேசுகையில் இவர்களின் சித்திக்கு ஆசிரியர் மட்டுமல்ல பெற்றோரும் சரிசமனான பாராட்டைப் பெறுகிறார்கள் எனக் கூறினார்.

யாழ்ப்பாணம் பிரதம கல்வி அதிகாரி திரு. கே. சோமசுந்தரம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் திறமைசாலிகள் ... பெற்றோருக்கு நம்பிக்கையில்லாமையால் தான் ஆசிரியர்கள் தம் திறமையை வெளிக்காட்ட வெளிநாடு செல்கிறார்கள். பாடசாலைகள் மூலம் தான் நாம் ஆளுமையுடைய முழு மனிதராக வருகின்றோம். எனவே, பாடசாலை ஆசிரியர்களுக்கு நாம் என்றும் விசுவாசம் உடையவராக விளங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா அதிபர்கள் திரு. ஏ மனோகரன், திரு பி. ஆர். நடராஜன் ஆகியோரும் உரையாற்றினர்.

திரு. வி. தற்பரானந்தன் நன்றி கூறினார். (ஊ)

# பண்டத்தரிப்பு நூல்நிலையம்: புனரமைக்க நடவடிக்கை

பண்டத்தரிப்பு, வெள்ளி.

யாழ். அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலக நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் பொதுசன நூல்நிலையத்தை புனரமைப்புச்செய்து பொதுமக்களுக்கு அங்குள்ள சஞ்சிகைகளையும் நூல்களையும் இலகுவாக படிப்பதற்கேற்ற வசதிகளை செய்து கொடுக்கவும், நூல்களை இரவல் கொடுக்கவும் அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எஸ். ரி. கதிரவேற்பிள்ளை நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இந்த பொதுசன நூல்நிலையத்தில் தரம்வாய்ந்த தமிழ் நூல்களும் உயர்வகுப்பு மாணவருக்கான நூல்களும், தமிழ் நாட்டு சஞ்சிகைகளும் இடம் பெற்றுள்ளதாகவும், இப்பகுதி பொதுமக்களும் குறிப்பாக மாணவர்கள் இந்த அரிய நூல்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு நோக்கி கடற்றொழிலாளர் நகர்வு

புங்குடுதீவு, வெள்ளி. வடமராட்சி பகுதியில் இடம் பெற்ற அசம்பாவிதங்களையடுத்து அப்பகுதி கடற்றொழிலாளர் குடும்பங்கள் பல புங்குடுதீவு நோக்கி இடம்பெயர்கின்றன

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பலாலி ஆகிய இடங்களில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட விமான ஹெலிகொப்டர், ஷெல் தாக்குதல்களையடுத்து கரையோரப்பகுதிகளிலிருந்த பல கடற்றொழிலாளர்களின் குடும்பங்கள் அதிகளவில் பாதிப்படைந்துள்ளன.

இதனையடுத்து இக்குடும்பங்கள் புங்குடுதீவு பகுதியில் கண்ணகை அம்மன் கோவில் கடற்கரையிலும், ஆஸ்பத்திரி கடற்கரையிலும் கொட்டில்களை அமைத்து தொழில் செய்து வருகின்றனர்.

மேலும் குறிகட்டுவான் பகுதியில் பாதிப்படைந்த கடற்றொழிலாளர்கள் குடும்பங்கள் பலவும் இப்பகுதி நோக்கி தொழில் செய்யும் நோக்கில் நகர்ந்த வண்ணமுள்ளனர். (சி)

தெல்லிப்பழை

## இரத்த வங்கியில் இரத்தம் இல்லை

சுன்னாகம், வெள்ளி.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் உள்ள இரத்த வங்கியில் சில பிரிவு இரத்தத்திற்குத் தட்டுபாடு நிலவிவருகிறது.

இரத்தவங்கியில் நிலவும் இத்தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு நலன்விரும்பிகளை இரத்தம் கொடுத்துதவுமாறு ஆஸ்பத்திரி வட்டாரம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## நாளைபிரவேசப் பரீட்சை

பருத்தித்துறை, வெள்ளி.

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் அடுத்த வருடம் 6ம் வகுப்பில் மாணவிகளை அனுமதிப்பதற்கான பிரவேச பரீட்சை நாளை 7ம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கல்லூரியில் அடுத்தவருடம் 6ம் வகுப்பில்சேர விரும்பும் மாணவிகள் இப்பரீட்சைக்கு தோற்றுமாறும் இப்பரீட்சையில் ஆகக்கூடுதல் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் மாணவிக்கு பருத்தித்துறை இராமகிருஷ்ணசாரதாசேவாச்சிரமத்தின் அன்னை சாரதாதேவி ஞாபகார்த்த புலமைப்பரிசில் வழங்கப்படுமெனவும் கல்லூரி அதிபர் திருமதி சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (கே)


**கடைசி நேர வரி விளம்பரம்**

**விற்பனைக்கு**

Pioner Mx 40 Tape Recorder மற்றும் Sisil R80 குளிர் சாதனப்பெட்டி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 47, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (C-6210)

**பிரயாண ஒழுங்குகள்**

விமான டிக்கட்டுகள் வெளிநாடு பிரயாண வசதிகள் சகாய அடிப்படையில் காலதாமதமின்றி செய்துகொடுக்கப்படும்.

கனடா, டென்மார்க், லண்டன்

பாஸ்போட், பொண்டிங், விசா ஒழுங்குகள்

மற்றும்

மாலைதீவில் வேலைவாய்ப்பு

[ஆண்கள்]

(உடனடியாக அழைத்துச் செல்வோம்)

தொடர்பு:

S. V. அப்புத்துரை

நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில்.

C 6157

**தமிழர் கலாசார அவையின் "கவின் கலை அரங்கம்"**

வாராந்த கலை நிகழ்ச்சி

இடம்: யாழ். வின்ஸர் கலை அரங்கம்

காலம்: 7-12-1986 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: பிற்பகல் 3-30 மணி

எம்மக்கள் பலரதும் வேண்டுகோளிற்கிணங்க... காங்கேசன்துறை "வசந்தகான சபா"வினர் வழங்கும்

நடிகமணி V. V. வைரமுத்து குழுவினரின்

அரிச்சந்திர மயான காண்டம்

நாடகம் நடைபெறவுள்ளது.

★ நமது பாரம்பரிய நாடகக்கலையின் மகத்துவத்தை வெளிக்காட்டும் இந் நாடகத்தை கண்டு ரஸிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ பிரவேசம் ரூபா 3/- மட்டுமே.

✶ நிகழ்ச்சி குறிப்பிட்ட நேரத்திற்கு சரியாக ஆரம்பமாகும். (A 2198)


## இனப்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நமது நிருபர் நேற்று சந்தித்த போது இதனை வலியுறுத்திச் சொன்னார்.

காலியைச் சேர்ந்த இவர் ஒரு பண்டிதர்.

"உண்மையான விஷயங்கள் மறைக்கப்படுகின்றன தென்னிலங்கையில் உள்ள பத்திரிகைகளும் வானொலியும் தொலைக் காட்சியும் உண்மைக்குப்புறம்பான செய்திகளை திரிபுபடுத்தி வெளியிடுகின்றன என்று தெரிவித்த மகாநாயக்கதேரர் இந்த நாட்டைப் பிளவுபடுத்த நாங்கள் விரும்பவில்லை ஆனால் தமிழரின் பூமு உரிமையும் வழங்க வேண்டும் என்று சொன்னார்

யாழ். குடாநாடு உத்தியோகப்பற்றற்ற முறையில் பிரிந்திருப்பதையும் இங்கு ஒரு தனியாட்சி நடைபெறுவதையும் இன்றுதான் உணரக்கூடியதாக இருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார். (மா)

## அனைவரும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டுள்ளனர். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழீழ விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்து தமிழீழ நிர்மாணம் படிப்படியாக ஒவ்வொரு துறைகளிலும் இடம்பெற்று வரும் இவ்வேளையில் கல்வி ஓர் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது.

இவ்வருடம் பல்வேறு இராணுவ நெருக்கடிகள் காரணமாக பாடசாலை நாட்கள் குறைவாக இருந்தது. பல பாடசாலைகள் இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது. இது போன்ற பல்வேறு நெருக்கடிகள் மத்தியிலும் மாணவர்கள் கல்வியில் அதீத அக்கறை செலுத்தி கல்வி கற்று வருகிறார்கள்.

இந்நிலையில் தற்சமயம் இடம்பெறும் க.பொ.த.சாதாரண பரீட்சையில் எவரும் எதுவித இடையூறும் விளைவிக்க வேண்டாமெனக் கேட்டுக்கொள்வதுடன் பரீட்சை ஒழுங்காகவும் அமைதியாகவும் நடப்பதற்கு சகல தரப்பினரும் தம்மாலான ஒத்துழைப்பையும் வழங்கவேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

இப்பரீட்சைக்கு தோற்றும் மாணவ செல்வங்களுக்கும்பரீட்சை சிறப்பாக அமைய எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்" எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)


**லிடோ**

10-30, 2-30, 4-30, 6-30

Yul Brynner, Steven Mcqueen in MAGNIFICENT SEVEN [Attack And Action]

7-ம் திகதிமுதல் BOLERO (Strictley for Adults)

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க

**வெலிங்டன் திரையில்**

10-30, 2-30, 6-30

பிரேம்நஸீர் - முரளி L. விஜயலட்சுமி திருக்குருசி நடித்த

யேசுநாதர்

12 முதல்

TOO HOT TO HANDLE (Adults only)


## இந்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

க்கை எடுக்கவுள்ளனர்.

இத்தூதுக் குழுவின் தலைவர் டாக்டர் ஞானா றேபிலே பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் பேசிய போது தமது தூதுக்குழு இலங்கையில் ஜனவரி 15 முதல் 22 வரை இருக்குமெனக் கூறினர். இச்சந்தர்ப்பத்தில் பலதரப்பட்ட குழுவினரையும் தாம் சந்திக்கப் போவதாகக் கூறிய அவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்வதற்கான அனுமதியும் கோரப்பட்டதெனவும் தெரிவித்தார்.

இத்தூதுக்குழுவின் மற்றைய அங்கத்தவர்கள், தமிழ் நாடு தத்துவ நிலையத்தால நடத்தப்படும் கிராமிய தத்துவ நிலையத்தின் பணிப்பாளர் டாக்டர் தியான்சண்டகார், சமூக பகுப்பாய்வு செயற்பாட்டு நிலையத்தின் பணிப்பாளர் டாக்டர் பஸ்தியான் வீலெமிகா ஆகியோராவார். (கூ-கே)

## உறவினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்மக்களை குறிப்பாக தீவிரவாதிகளை எமது பகைவர்களாகவும் கொடுமைக்காரர்களாகவும் நினைத்துவந்தோம் ஆனால் இப்போது தான் அவர்களும் எம்மை போன்ற சாதாரண மனிதர்களெனவும் தமது இளமையைத் தியாகம் செய்து போராடுகின்றனர் என்பதும் தெரிகிறது"

இவ்வாறு 2 வது லெப்.பண்டாரவின் 25 வயது சகோதரர் கூறினார்.

### மகனைக்கண்டபின் தாய்

"எனது மகனை இவ்வளவு காலத்துக்கு பின்னர் கண்டபின் எனக்கு ஏற்பட்டுள்ள சந்தோஷத்தை அளவிடமுடியாதுள்ளது. இச்சந்தர்ப்பத்தை அளித்தற்காக நாங்கள் விடுதலைப் புலிகளுக்கு என்றென்றும் கடமைபட்டுள்ளோம். இனி மகனின் விடுதலைக்கு முயற்சிப்பதே எனது கடமை"

இவ்வாறு சிப்பாயின் தாயார், தனது மகனைக்கண்டபின் எமது நிருபருக்களித்த போட்டியின் போது கூறினார்

எனது மகனைக்கண்டபின் அவர் உயிருடன் இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டோம் அதுவே எனக்கு சந்தோஷமாயுள்ளது.

இவ்வாறு 2வது லெப்டினன்டின் சிறிய தாயார் கூறினார்.

### தாயைக்கண்டபின் மகன்

தனது தாயையும் மற்றும் நெருங்கிய உறவினர்களையும் நெடுநாளைக்கு பின்னர் சந்தித்ததனக்கு மகிழ்ச்சியைத் தருவதாக ஒரு சிப்பாய் கூறினார் (ஊ)

## டிக்ஷிற்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிராகரித்ததையடுத்து இப் பிரஜைகள் குழு உறுப்பினர்கள் சிலர் நேற்று உடனடியாக கொழும்பு புறப்பட்டுச் சென்றனர். யாழ் பிரஜைகள் குழுவினருடன் இவர்கள் இன்று சனிக்கிழமை திரு டிக்ஷிற்றை சந்திப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

இக்குழுவுடன்மட்டக்களப்பு மாவட்ட தொழிற்சங்க சம்மேளன ஆலோசகரும் இலங்கை தமிழ் ஆசிரியர்சங்க முன்னாள் தலைவர் பி எஸ். கே. வணசிங்க, செயலாளர் சட்டத்தரணி திரு பொன் வேணுதாஸ் அக்கரைப்பற்று பிரஜைகள் குழு தலைவர் ஜனாப் பி அமைதுலெப்பை உப தலைவர் சிவஸ்ரீ சிவஞானசெல்லக்குருக்களும் திரு டிக்ஷிற்றை சந்திக்க சென்றுள்ளனர். (சி)

## எமது நிபந்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

சேர்ந்தனர்.

இதற்குமுன்னதாக இந்த நல்லெண்ணத் தூதுக்குழுவினர் ஆனையிறவு இராணுவ தடைமுகாமைத் தாண்டிவந்து பளையில் விடுதலைப் புலிகளின் தடைமுகாமை அண்மித்ததும் விடுதலைப் புலிகள் வரவேற்றனர் அங்கு வைத்து குளிர்பானம் வழங்கப்பட்டது.

பலத்த பாதுகாப்புடன் இக்குழுவினர் யாழ்ப்பாணம் சுபாஸ் விடுதிக்கு அழைத்து வரப்பட்டனர். சுபாஸ் விடுதியில் சில மணிநேரம் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த இக்குழுவினரில் இரு சிப்பாய்களின் பெற்றோரும் பக்ஸ் கட்சிக் குழுவினரும், பத்திரிகையாளரும் மாத்திரம் யாழ். நகரிலுள்ள பிரதான மண்டபமொன்றிற்கு வாகனங்களில் அழைத்து செல்லப்பட்டனர்.

சுபாஸ் விடுதி முன்னாலும் வீதியோரங்களிலும் மக்கள் பெருந்தொகையானோர் குழுமி நின்று பார்வையிட்டனர்.

பிரமாண்டமான அந்த மண்டபத்தை மேற்படி குழுவினர் அடைந்ததும் பிரமிக்கத் தக்க மாதிரி விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையினர் அணிவகுத்து நிற்க முக்கிய பிரமுகர்கள் சகிதம் தளபதி திரு கிட்டு விஜை குழுவினரை கை கொடுத்து வரவேற்றார்.

இரு சிப்பாய்களின் பெற்றோர் உறவினர்கள் கிட்டுவின் கால்களில் விழுந்து கண்ணீர் வட்டுக் கதறி அழுதார்கள். பிரிந்திருக்கும் இரு பிள்ளைகளையும் பார்ப்பதற்கு ஆவலாக இருப்பதைத் தெரிவித்தனர்.

மண்டபத்தின் கூட்ட அறையில் பத்திரிகையாளர்களுடனும் விஜ குழுவினருடனும் திரு. கிட்டு அளவளாவினார்.

### இவர்கள் பயங்கரவாதிகள் அல்ல

'இவர்கள் பயங்கரவாதிகளல்ல, தங்கள் உரிமைக்காகப் போராடும் போராளிகள்' என்று திரு. விஜேகுமாரணதுங்க, சிப்பாய்களின் பெற்றோர்களுக்கு அறிவுறுத்தினர்.

'முதல்தடவை உங்களுடன் பேசிவிட்டு, எங்கள் நிலையை பற்றி தென்னிலங்கையில் நீங்கள் செய்த உண்மையான பிரசாரத்தால் சிங்களமக்கள் மத்தியில் உங்களுக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டுள்ளதாக அறிந்தோம் இதனால்இம்முறை பலதடைகளை அரசாங்கம் விதித்திருந்தது இருந்தும் இத்தடைகளை மீறி மீண்டும் இங்கு வந்ததை நான் பாராட்டுகிறேன் என்றார் திரு கிட்டு.

திரு கிட்டு: எங்கள் நிபந்தனைபற்றி நீங்கள் அரசுக்குத் தெரிவித்த பொழுது, ஏதும் பதில் கிடைத்ததா?

திரு விஜே: அரசு மௌனம் சாதிக்கிறது.

திரு கிட்டு உங்களைப்போல் வேறுகட்சிக்காரர்களும் யாழ்ப்பாணம் வரவிரும்புகிறார்களா?

திரு. விஜே: லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும் வரவிரும்புகிறார்கள்

திரு கிட்டு: தென்னிலங்கையில் இருந்து இந்த அரசு சார்பானவர்கள்கூட இங்கு எம்முடன் பேசவந்தாலும் தகுந்த பாதுகாப்பு அளிப்போம்.

"நாங்கள் சிங்கள மக்களுக்கெதிரானவர்களல்ல; எம்முடன் போர் செய்துகொண்டிருக்கும் இராணுவ அதிகாரிகளுடன் கூட பேச்சுவார்த்தை நடத்தினோம்.

கைதான இரு சிப்பாய்களையும் விடுவிப்பதானால் அரசு சிறை வைத்திருக்கும் எமது போராளிகளுள் இருவரை மாத்திரம் விடுவிக்கவேண்டுமென்ற நிபந்தனை விதித்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் தமிழர் பிரச்னை:

# "நம்பிக்கைதரும் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது"

### — பிதா திஸ்ஸ பாலசூரிய

லண்டன், டிச-5

இலங்கைத் தமிழர் பிரச்னையில் நம்பிக்கைதரும் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை சமுதாய மத நிலையத் தலைவர் திஸ்ஸ பாலசூரிய தெரிவித்துள்ளார்.

மெக்ஸிக்கோ நகரில் நடக்கவிருக்கும் சமாதான மகாநாட்டில் கலந்துகொள்ளச் செல்லும் வழியில லண்டனில் சில நாட்கள் தங்கியிருக்கும் திரு திஸ்ஸ பாலசூரிய லண்டன் பி.பி.ஸி க்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையரசு முன்வைத்துள்ள புதிய சமாதானத் திட்டம் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதற்கு நல்ல அடிப்படையாக இருக்குமென இந்திய அரசும், தமிழ்நாட்டு அரசும் கருதுவது தனக்கு இந்த நம்பிக்கையைத் தந்திருப்பதாகக் கூறினர்.

தமிழ்ப் போராளிகள் இந்தச் சமாதானத் திட்டங்களை நிராகரித்திருப்பதனால் சமாதான முயற்சிகள் தோல்வியடைந்துவிடுமா எனக்கேட்டதற்கு, தமிழ்க் குழுக்கள் இந்தத் திட்டத்தை முற்றாக நிராகரித்துவிடவில்லை சில மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டுமெனக் கருதுகின்றன எனப் பதிலளித்தார்.

தமிழ்க் குழுக்கள் உண்மையில் தமது கலாசாரத்தை, பண்பாடுகளை, வாழ்க்கை முறையை, பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யக் கூடிய அளவிற்குத் தமதுபகுதிகள் தமக்கு வழங்கப்பட வேண்டும்; தமக்குப் போதிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்; இந்த அரச பதவியிலிருந்து நீக்கப்பட்டு இன்னொரு அரசு பதவிக்கு வந்தால் இந்த உரிமைகள் பறிக்கப்பட மாட்டாது என்ற உறுதிமொழி வழங்கப்பட வேண்டுமென்று கேட்கிறார்கள் என்று தெரிவித்த அவர், தமிழ்க் குழுக்கள் இப்பொழுது தமிழ்நாட்டுக் கோரிக்கையில் பிடிவாதம் காட்டவில்லையென்றும் கூறினர்.

வட்டாரக் குழுக்கள் திட்டத்தைச் சிங்கள மக்கள் எதிர்க்கமாட்டார்கள் என்றும், சாதாரண மக்கள் இலங்கையில் நீடித்துக் கொண்டே போகும் வன்முறைகளைக் கண்டு மனம் சலிப்படைந்திருப்பதாகவும், தமிழர் பிரச்னைக்குத் தீர்வு ஏற்படவேண்டுமென்று மக்கள் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்க் குழுக்கள் சமாதானம் ஏற்பட வேண்டுமென்று விரும்புகின்றனர். ஆனால் அந்தச் சமாதானம் கௌரவமான சமாதானமாக இருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றனர் என்றும் அவர் கூறினர்.

திரு திஸ்ஸ பாலசூரிய லண்டனில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்னைபற்றிப் பேசினர். (ஒ)

---

## தேர்தல் கமிஷனர் அறிக்கையின் எதிரொலி:

# அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை சுதந்திரக்கட்சி கொண்டுவரும்

லண்டன், டிச-5

இலங்கை அரசு 1982ல் நடத்திய பொதுஜன வாக்கெடுப்புக் குறித்துத் தேர்தல் கமிஷனர் இந்த வாரம் வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்து அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவரவும் பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு நெருக்கடிகொடுக்கவும் சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது.

இதேவேளை இலங்கையரசு மக்களாட்சி மரபை மதித்து வரும் அரசு எனக்கூறிய அமெரிக்க அதிபர் றேகன, தேர்தல் கமிஷனரின் இந்த அறிக்கையை வாசித்துப் பார்க்க வேண்டுமென்று திருமதி ஸ்ரீமாவோ கூறியுள்ளார். (ஒ)

## வாக்கெடுப்பில் இடம்பெற்ற சில சம்பவங்கள்:

# இலங்கையின் சுதந்திர வரலாற்றில் மிக மோசமானவை — கமிஷன் அறிக்கை

கொழும்பு, வெள்ளி

கடந்த 82ம் ஆண்டு நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பின்போது இடம்பெற்ற ஒழுங்கீனமான சம்பவங்களைப் போன்று இலங்கை சுதந்திரமடைந்தபின் வேறெப்போதும் நடைபெறவில்லை என இச் சர்வஜன வாக்கெடுப்புப்பற்றிய தமது அறிக்கையில் தேர்தல் கமிஷனர் சுண்டனந் தெரிவித்துள்ளார்.

கமிஷனர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

"இந்த சர்வஜன வாக்கெடுப்பு அவசரகாலச் சட்ட ஆட்சியின் கீழே நடத்தப்பட்டுள்ளது. வாக்கெடுப்பைக் கண்காணித்தவர்கள் கடத்தப்பட்டுப் பயமுறுத்தப்பட்ட சம்பவங்களும், வாக்கெடுப்பின்போது பலாத்காரச் சம்பவங்களும், வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. அத்துடன் கட்சியொன்றின் தலைமைச் செயலாளர் கைது செய்யப்பட்டார். இவை யாவற்றையும் அறிந்தும் பொலிசார் மிகவும் அலட்சியமாக இருந்துள்ளனர்.

இவை எல்லாவற்றையும் விட இரகசிய வாக்கெடுப்பு முறைக்கு விரோதமாகவும், குத்தகம் விளைவிக்கும் முறையிலும் அடையாளமிடப்பட்ட வாக்குச்சீட்டுகள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன என்றும், இது தற்செயலாக நடந்த தவறென்று கூறமுடியாது யாரோ பிறப்பித்த உத்தரவின்பேரில் இது நடந்திருக்கிறது" எனவும் இவ்வறிக்கை கூறுகிறது. (ஒ)

---

# இன்றைய பலன்

மாதம்: கார்த்திகை

திகதி; 20 (6-12-86)

சனிக்கிழமை

நக்ஷத்திரம்: திருவோணம்

திதி: பஞ்சமி மேல் ஸஷ்டி

மேடம்: தொழில்முன்னேற்றமுண்டு. இதயம் இன்பத்தால் மலரும். தாய்வழியாலும் நிம்மதி பிறக்கும்.

இடபம்: கட்டி வெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை. வேண்டியளவிற்கு வெள்ளிப் பணங்கள் துள்ளும். தொழில் மகிழ்ச்சியுண்டு.

மிதுனம்: தவறுகள் நடக்கலாம் வேண்டாத விவாதங்களால் வீண்பெயர் கேட்கநேரிடும். தொழில் நெருக்கடியும் தோன்றும்.

கடகம்; காதலர் எண்ணங்களும் கைகூடும் தொழில் மந்தமுண்டு. விவசாயிகளுக்கு நன்று.

சிங்கம்: எதிலும் ஏமாற்றம் தென்படும், அரசபயத்திற்கிடமுண்டு. எதிர்பாராத விபத்திற்கிடமுண்டு.

கன்னி: கால்நடை விருத்திக்கிடமுண்டு இறைநம்பிக்கை மேலிடும். யாத்திரைப் பிரியமும் உண்டாம்.

துலாம்: இலட்சியப் பாதையில் வீறுநடை போடுவீர்கள் புதுமனை வாழ்வும் கிட்டும். தொழில் முயற்சி முன்னேற்றம் தரும்.

விருச்சிகம்: உயர் எண்ணங்கள் புகழின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும். உத்தியோக உயர்வுமுண்டு உற்சாகமாக நாளைக்கழிப்பீர்கள்

தனுசு; வெளியூர்ப் பயணம் வேதனையைத்தரலாம். தனதானிய நஷ்டமுண்டு. தொழில் மந்தநிலையுமுண்டு

மகரம்: சூழ்நிலை பின்னும். எக்காரியத்திலும் அதிக கவனம் செலுத்தவும கடமையிலும் கண்ணியம் பிறக்கும்.

கும்பம்: மணமக்கள் வாழ்வில் நன்மாற்றமுண்டு தொழில் துறையில் புதிய கொள்வனவுகளும் மேற்கொள்ளப்படலாம். அறிஞர்களின் சந்திப்பும் கிட்டும்

மீனம்: அற்பவிடயத்திற்கும் ஆத்திரப்படுவீர்கள். பகையாளிகளின் சூழ்ச்சிகள் பலமாகவிருக்கும். மனத்திடம் நன்று.

திருமலை
வே. ரவீந்திரன்

---

## ஜனாதிபதி...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கி, பஞ்சாப்பில் தமது சொந்தக்கிராமமான சாப்குவானுக்குப் பயணமானார். இக்கிராமம் டரீபூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

பாதுகாப்புக் காரணங்களை விட்டு தமது சொந்த இடத்துக்கு அடிக்கடி செல்வதை தவிர்த்திருந்த ஜனாதிபதி, இத் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சாப்குவால் பயணமாகியுள்ளார்.

பிரதமர் திரு ராஜீவ்காந்தி மற்றும் உப ஜனாதிபதி, அமைச்சர்கள் ஆகியோர், ராஷ்டிரபதிபவன் சென்று தமது அனு[illegible] நேரில் தெரிவித்[illegible]னர்.

---


## 87 A/L Day Class

APP. — நீர் நிலையியல்
PURE. — சிக்கல் எண்கள்

ஆரம்பம்: 08-12-1986
(7-00 — 9-00 காலை)
திங்கள்—தொடக்கம்—வெள்ளி

குறிப்பு: ஒரு மாத கால எல்லைக்குள் பூர்த்தியாக்கப்படும்.

## 88 A/L

APP. — காவிகள்
PURE. — வகையீடு

ஆரம்பம்: 10-12-86 (மாலை 4-00 மணி)

ஆசிரியர்:- A. பத்மநாதன்

விபரங்கட்கு:
NIRU TUITION CENTRE
KONDAVIL. [A-3216]


---

# பனை அபிவிருத்திச் சபை

## பனம்தோப்புக்களையும் அத்தகைய தோப்புக்களின் சொந்தக்காரர்களையும் பதிவு செய்வது சம்பந்தமான

# அறிவித்தல்

1975ம் ஆண்டு 24ம் இலக்க தெங்கு அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1971ம் ஆண்டின் 46ம் இலக்க தெங்கு அபிவிருத்தச் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள 2ம் அட்டவணையின் பிரகாரம் பனை அபிவிருத்திச் சபை பனந்தோப்புக்களின் சொந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்குத் தீர்மானித்துள்ளது.

### நோக்கங்கள்:

1. பனைமரத்தின் வளர்ச்சி, பயிரிடுகை பற்றி ஆய்வுகள் நிகழ்த்தல், ஊக்கமூட்டல். பனந்தோட்டப் பண்ணைகளில் பிறபயிர்களை விளைவித்தலும், கால்நடை பண்ணைகளை நடத்துதலும், நோய்களையும், அழிவு செய்யும் உயிரினங்களையும் தடுத்து ஒழித்தல்.
2. ஆய்வு நிறுவனங்களையும், செய்முறை நிலையங்களையும் நாற்றுப் பண்ணைகளையும் நிறுவுதல், பராமரித்தல்
3. பனம் விளைவுப் பொருட்களைப் பதனிடுதல், பயன்படுத்தல் தொடர்பான விஞ்ஞான ஆய்வினை நிகழ்த்தல் ஊக்கமூட்டல்.
4. பனம் விளைபொருட்களைப் பதனிடுவதற்கான முன்மாதிரி இயந்திரங்களை நிறுவுதல், பராமரித்தல்.
5. பனம் தொழிற்துறைக்கு உதவுவதற்கென ஆலோசக விசாலிப்பு ஊழியர்களைப் பயிற்றுவித்தல்
6. பனந்தொழிற்துறைக்கு தொழில்நுட்ப இயல்புடைய சகல விடயங்களிலும் வழிகாட்டல், ஆலோசனை வழங்கல்
7. பனந்தோட்டப் பண்ணைகளிலுள்ள நிலங்களை உற்பத்திப் பெருக்கத்திற்கமைய விரிவுபடுத்த உதவுதல்
8. பனை பயிரிடுதல், பனை பயிரிடுவதற்கு உதவுதல், ஊக்குவித்தல் ஒழுங்குமுறை வகுத்தல்.
9. பனையிலிருந்து பெறப்படும் பொருட்களிலிருந்து உற்பத்திகளை மேற்கொண்டு பனை சொந்தக்காரர்களுக்கும் ஏனையோர்களுக்கும் கூடிய வருமானத்தைப் பெறக்கூடிய வகையில் ஆக்கமும் ஊக்கமும் அளித்தல்.

### பதிவுசெய்தல்:

1. 25 பனைகளுக்குமேல் வைத்திருக்கும் பனைச்சொந்தக்காரர்கள் தம்மைப் பதிவு செய்துகொள்ளலாம்.
2. பதிவு செய்வதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் யாவும் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் ஊடாக அவ்வப்பகுதிக்குப் பொறுப்பாகவிருக்கும் விசேட சேவை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
3. பூர்த்தி செய்யப்பட்டவிண்ணப்பப்படிவம் அதற்குரிய உறுப்புரிமைப் பணத்துடன் அவ்வவ் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விசேடசேவை உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கலாம்.
4. பூர்த்தி செய்யப்பட்ட பட்டியல்களையும், உரிய உறுப்புரிமைப்பணத்தையும் விசேட சேவை உத்தியோகத்தர் எமக்கு அனுப்பி வைப்பார்.
5. உறுப்புரிமைப் பணத்தை உரிய அங்கத்தவரிடமிருந்து வசூலிப்பதற்குரிய பற்றுச்சீட்டுப் புத்தகம் விசேடசேவை உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ளது.

### குறிப்பு:

பனை அபிவிருத்திச் சபையில் தம்மைப் பதிவுசெய்யும் பனைச்சொந்தக்காரரே சபையால் வழங்கப்படும் உதவிகளைப் பெறத் தகுதியுடையவர்களாகக் கருதப்படுவர்.

மேலதிக விபரங்களை பனை அபிவிருத்திச்சபையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
பனை அபிவிருத்திச்சபை,
தேசிய வீடமைப்புச்செயலகம்
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

A 8225

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
சகுந்தலாதேவி
அலெக்ஸ்சாண்டர்

பூவுலகில்: 19-5-1919
இறையடியில்: 6-11-1986

உயிருள்ளவரை நேசித்தவரை எம் உயிர்ப்புவரை நினைத்திருப்போம்.

கணவன், மகன், பெற்றோர், சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.
690, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

(C 6199)

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி



விஜயரத்தினம்
விஜயகுமார்

தோற்றம்: 20-01-50
மறைவு: 6-12-83

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காக, அணையாத சோதியே எங்களை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டுத் திடீரென அணைந்துவிட்ட அன்புத் தெய்வமே. நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும், உங்கள் நினைவு எம்மை விட்டகலாது.

தங்கள் நல்லாத்ம சாந்திக்காக, நாம் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அம்மா, அக்கா, அண்ணா, தங்கைமார், மைத்துனர்மார், மைத்துனி, மருமக்கள், மக்கள்.

"ராச பவனம்"
அராலி கிழக்கு,
வட்டுக்கோட்டை.

C 6201

## அதிபர்களுக்கு பாராட்டு

உடுவில், வெள்ளி

முன்பு இருந்த அதிபர்களைவிட தற்கால அதிபர்களுக்கு திறமையும், கெட்டித்தனமும் உண்டு. மிகுந்த பற்றாக்குறை மூலவளங்களை வைத்துக் கொண்டு பாடசாலைகளை சிறந்த முறையில் நிர்வகிப்பது அவர்களின் முகாமைத்துவச் சிறப்பையே எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறு யாழ்ப்பாணம் பிரதம கல்வி அதிகாரி திரு: எஸ். சோமசுந்தரம் மானிப்பாய் கல்விவட்டார பாடசாலை அதிபர்கள் கூட்டம் உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றபோது தெரிவித்தார்.

## மின் தடை

இலங்கை
மின்சார சபையின்

## முக்கிய அறிவித்தல்

1986 12-07ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முக்கிய திருத்த வேலைகளை செய்ய இருப்பதனால் காலை 8-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் அமைந்திருக்கும் பெரும்பாலான உப மின் நிலையங்களுக்கும், கோண்டாவில் கொக்குவில், கோப்பாய், திருநெல்வேலி, மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய பகுதிகளுக்கும் மின் விநியோகத் தடை ஏற்படுமென சகல மின்பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இம்மின் தடையால் ஏற்படும் சகல மின் நுகர்வோரிடமிருந்தும் அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இப்படிக்கு,
**மின் பொறியியலாளர்,**
யாழ் பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை.
சுன்னாகம்.

(A 3186)

[illegible]

யாழ்ப்பாணம், சனி

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் நல்லூர்ப் பிரிவிற்கான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

## முதலாவது நினைவஞ்சலி

திருமதி குமாரசாமி
வள்ளியம்மை

சித்தங்கேணி அமரர் திருமதி முதலியார் குமாரசாமி வள்ளியம்மையின் முதலாவது ஆண்டுத் திதி இன்று நடைபெறவுள்ளது. இத்தினத்தில் அவரது சேவைகளை நினைவூர்ந்தும், அவரது ஆன்ம ஈடேற்றத்திற்காகவும், பிரார்த்திக்க சித்தங்கேணி மக்களும், குறிப்பாக ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் ஆலய பரிபாலன சபையும், மகா கணபதிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையும், சித்தங்கேணி மாதர் சங்கமும், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியும், இன்னும் பல சங்கங்களும், பொது ஸ்தாபனங்களும் கடமை பூண்டுள்ளன.

அமரர் முதலியார் சரவணமுத்து குமாரசாமி சிவனருளாலும், தனது பத்தினி வள்ளியம்மை, உதவி கொண்டும், விடா முயற்சியால்தேடியசொத்துவில்பெரும்பகுதி புண்ணிய காரியங்களில் செலவிட்ட அருட்பேற்றையும், முதலியார் சரவணமுத்து குமாரசாமி திருமதி குமாரசாமி வள்ளியம்மையின் நல்ல நோக்கங்களினால் இக் குடும்பம் பாக்கியமடைந்துள்ளது.

இவர்கள் இருவரது சேவைகளை விரித்துக் கூற வேண்டியதில்லை. பெரும்பாலான திருக்கோயில்களுக்கும், பல கல்வி ஸ்தாபனங்களுக்கும் பொருளுதவியும், தர்ம விஷயங்களில் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும், மறுபாகங்களிலும் உதவிகள் புரிந்துமுள்ளார்கள். இவர்கள் ஆன்ம ஈடேற்றத்திற்கு சிவன் அருள் புரிவாராக.

ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர்
ஆலய,
பரிபாலன சபை,
சித்தங்கேணி.


C 6203

## பொருட்காட்சி

மன்னார், வெள்ளி

மன்னார் மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் ஆங்கிலப் போட்டி மன்னார் அல் அசுகார் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இதே வேளையில் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் தொழில் நுட்பப் பொருட்காட்சியும் இடம்பெற்றது. போட்டியில் 50க்கு மேற்பட்ட பாடசாலைகள் பங்கெடுத்தன. சகல ஏற்பாடுகளையும் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் செல்வி. எம். ஆறுமுகம் மேற்கொண்டிருந்தார்.

## 90-ம் நாள் கண்ணீர் அஞ்சலி



செல்வன்
ஜே. உதயபிரசாத்
(ராஜன்)

பிறப்பு: 18-05-1970
இழப்பு: 0?-09-1986
திதி: 06-12-86

ஆண்டவன் திருவடியில் அமைதிபெறும் உதயனே, உதயா என அழைத்தவாயால் இனி யாரை அழைப்பேனடா. உதயம் தேடிப்போன நீ எங்கே? திரும்பிய இடமெல்லாம் உன் உருவம் தோன்றி எம்மைக்கதற வைக்குதையா. பசுமை நிறைந்திருந்த எம்வீடு நீஇன்றி பாலைவனமானதப்பா.

என் மகனே உன் வரவை எதிர்பார்த்து நீ வரும் வழிமேல் விழி வைத்து ஏங்கித்தவிக்கின்றேன்; உன்னை அறிந்தோரும் தெரிந்தோரும் வந்தென்னை வினவுகையில் உன்னை வளர்த்தகதை சொல்வேனா? உன்னை இழந்தகதைசொல்வேனா? எதைச்சொல்லி அழுவேனடா?

நான் வளர்த்த கண்மணியே. நீ பரீட்சை எழுதவில்லை. அதன்முடிவும் அறியவில்லை. பிறந்த மண்ணின் பாசத்தால் கன்று நீ களரிக்குச்சென்றாயே, உன்கனவுகள் நனவாகுமுன்பே உன்கதை முடிந்ததையா.

தங்கமகனே உன்னை எப்படி மறப்பேனடா? உன் குறும்புச் செயலை மறப்பேனா? மழலைப் பேச்சை மறப்பேனா? முல்லைச்சிரிப்பை மறப்பேனா? எதைமறப்பேன்

நாம் காலமெல்லாம் கதறி துடிதுடித்தாலும் நீ பிறந்த மண்ணுக்குப் பெருமைசேர்த்தாய் உன் குருதித்துளிகள் விடுதலை விடுதலை என இங்கு ஒலமிடுகின்றன. உதிக்கும் நம் ஈழம் என்றும் உன் பெயரும் சொல்லுமடா.

உன் நினைவை சுமந்து வாடும்:
உன்தாய்,
சகோதரிகள்,
உறவினர்,
காரமேல் வீதி,
யாழ்ப்பாணம்.

[C-6209]

## 41-ம் நாள் நினைவாக



செல்வி மார்க்கண்டு
நாகபூசணி (இந்து)

சமாதி கோவிலடி,
குப்பிளான்.
[இராமநாதன் கல்லூரி
பழைய மாணவி]

மலர்வு: 30-07-1965
உதிர்வு: 27-10-1986

நீ
இறந்து விட்டதாக
யார் சொன்னார்கள்?
விடியலில்
படிகிற
ஒவ்வோர்
பசுந்துளியிலும்,
பனித்துளி
படிகிற
ஒவ்வோர் பூவிலும்,
பூக்களில் வீசும்
ஒவ்வோர் [illegible]
காற்றின் அணுவிலும் ...
இப்படியாக
முழுப் பிரபஞ்சத்தின்
ஒவ்வோர் கணத்திலும்,
ஒவ்வோர் அசைவிலும்,
ஒவ்வோர் அணுவிலும்
நீ
வாழ்ந்து
கொண்டேயிருக்கிறாய்.
யார்
சொன்னார்கள்
நீ
இறந்துவிட்டாய் என்று?
என்றும் எம்இதயங்களில்
வாழ்ந்து
கொண்டேயிருக்கிறாய்.

இப்படிக்கு
உன் உழைப்பை
உணர்ந்து உன்பிரிவால்
துயருறும்: பெற்றோர்,
உறவினர், நண்பர்கள்.

(C 6198)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



வவனியா - ஆசிகுளம்
சுப்பையா
சிதம்பரப்பிள்ளை

[முன்னாள் கி. மூ. தொ. த பிரிவு கிராமசபைத் தலைவரும், விவாக, இறப்பு பதிவு காரரும்]

பாதாரவிந்தம் சேர்ந்த நாள்:
6-12-84

ஊர்க்கெல்லாம் உதவற்கேற்ற
உயர்ந்த நற் சேவை செய்தாய்
ஆர்க்குமே அன்பு கொண்டே
அவனியில் நன்மை செய்தாய்
பார்மிசை எம்மை நீக்கி
பண்புசேர் தெய்வமே நின்
சீர்மிகு நினைவே நெஞ்சில்
திகழ்ந்திடும் என்றும் தானே

அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மக்கள், மருமக்கள்]

[C-6137,

## வல்வெட்டித்துறை நகரசபை

## கேள்வி அறிவித்தல்

1 - 1 - 1987 தொடக்கம் 31 - 12 - 1987 வரை கீழ்க் காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட குத்தகைகளுக்கு 12 - 12 - 1986 -ந் திகதி நண்பகல் 12 . 00 மணிவரை என்னால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

உரிய கட்டணங்களைச் செலுத்தி 11 - 12 - 86 ந் திகதி நண்பகல் 12 . 00 மணிவரை கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை

| குத்தகை விபரம் ......... | ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை ............ | கேள்வி வைப்புப் பணம் .......... | படிவக் கட்டணம் ......... |
|---|---|---|---|
| 1. மரக்கறிச் சந்தை வல்வெட்டித்துறை | 57,604/- | 1000/- | 25/- |
| 2. மீன்சந்தை, வல்வெட்டித்துறை | 30.000/- | 1000/- | 25/- |
| 3. மாட்டிறைச்சிக்கடை, வல்வெட்டித்துறை | 25,000/- | 500/- | 25/- |
| 4. பொலிகண்டிச் சந்திக்கண்மையில் ஆட்டிறைச்சி வியாபாரஞ் செய்தல் (கடை அமைத்துக் கொள்ள வேண்டும்) | 500/- | 250/- | 25-/ |

வ. இராமச்சந்திரன்
செயலாளர்,
நகரசபை, வல்வெட்டித்துறை.

நகரசபை அலுவலகம்,
வல்வெட்டித்துறை.

A-3190

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
6-12 86 சனிக்கிழமை

● கிழக்கு மாகாண முஸ்லிம்களின்

# அரசியல் பலத்தைப் பாதிக்கும் எந்தவொருதீர்வையும்ஏற்கமுடியாது

கொழும்பு, வெள்ளி

''தேசிய இன நெருக்கடி மிகவும் ஒரு பாரதூரமான பிரச்னையாகும். இது முஸ்லீம் மக்களின் கிழக்கு மாகாண முஸ்லீம்களின் எதிர்காலத்தை மிகவும் மோசமாக பாதிப்படையச் செய்யும். கிழக்கு மாகாண முஸ்லீம்களின் அரசியல் தீர்வைப் பாதிக்கும் எந்தவொரு தீர்வையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் இவ்வாறு முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜனாப் எம். எச். அஸ்ரப் நேற்று தெரிவித்தார்.

கொழும்பு சிலிங்கோ ஹவுசில் ஜனாப் அஸ்ரப் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தினார். இம் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்த குறிப்பாகதாவது:-

''நாம் வடக்குக் கிழக்கு இணைவதை எதிர்க்கவுமில்லை ஆனால் அதை ஆதரிக்கிறோம் எனவும் கூறமுடியாது நாம் ஓர் இக்கட்டான நிலையில் உள்ளோம். இதே வேளை இந்திய அரசாங்கம், இலங்கையில் சமாதானம் நிலவுவதற்கு முஸ்லிம் மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பு முள்ள ஒரு தீர்வே நிலையானதாக இருக்குமெனக்கருத வேண்டும்

எனவே இந்திய அரசாங்கமும் இலங்கை அரசும் தமிழ்ப் போராளிகளும் சமரசப் பேச்சுவார்த்தையில் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தவர்களெனக் கருதவேண்டும். இந்த இனப் பிரச்னையின் மூலகாரணம் மொழிப்பிரச்னையாகும்'

மன்னாரில பெருமளவில் முஸ்லிம்கள் இருந்த போதிலும் நாம் அவர்கள் தொடர்பாக எதுவித கேள்வியும் எழுப்பவில்லை. வடபகுதித் தமிழ்மக்கள் அவர்களுடன் நன்றாக இணைந்து நடப்பார்களெனஎனக்கு நம்பிக்கையுண்டு

வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணம் இணையும்

### ஜனாப் அஸ்ரப்

பட்சத்தில், தற்போது 33 சதவீதமாகவுள்ள முஸ்லிம்கள் 17 சதவீதத்துக்குத் தள்ளப் பட்டுவிடுவார்கள். இது அவர்களுக்குப் பாரியபாதிப்பை ஏற்படுத்திவிடும்.

தமிழுக்கு உத்தியோக பூர்வ அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். தமிழ ஆங்கிலமும பாடசாலைகளில் கட்டாய பாடமாகக் கற்பிக்கப் படவேண்டும். எந்தவொரு சமுதாயத்திற்கும், எந்தரீதியிலும் பாகுபாடு காட்டப்படாது நீதிநியாயம் வழங்கப்பட வேண்டும்;

## த. ஈ. ராணுவம் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

தமிழ் ஈழ ராணுவம் நடத்தி வரும் தமிழீழ போர் நிதிக்கான மாதாந்த அதிர்ஷ்டலாபச் சீட்டுக்கள் விற்பனை செய்வதற்கான தொகுதிவாரியாக விநியோகஸ்தர்களை நியமிக்கவிருக்கின்றது.

நல்லூர், கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, உடுப்பிட்டி, காங்கேசன்துறை, மானிப்பாய், வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை ஆகிய தொகுதிகளுக்கு அதிர்ஷ்டலாபச்சீட்டு விற்பனையாளர்கள் தேவையென்றும் இம்மாதம் 8-ம் திகதிக்கு முன் யாழ் ஸ்ராலி வீதியிலுள்ள தமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் மேற்படி இயக்கம் பத்திரிகை அறிக்கை மூலம் கோரியுள்ளது.

## யாழ். குடாநாட்டு கடல் பகுதியில் பீரங்கிப்படகுகளின் நடமாட்டம் அதிகரிப்பு

சுன்னாகம், வெள்ளி

யாழ். குடாநாட்டு கடற் பகுதிகளில் பீரங்கிப் படகுகளின் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது

இரவு நேரத்தில் வெளிச்சம் எதுவுமின்றி இப் பீரங்கிப் படகுகளின் நடமாட்டத்தை கடலோர மக்கள் அவதானித்துள்ளனர் பகல் வேளைகளில் மாதகலில் இருந்து தொண்டமானாறு பகுதி கடற் பிராந்தியத்தில் சுமார் ஆறு படகுகள் தரித்து நிற்பதையும் பத்துக்கு மேற்பட்ட சாதாரண படகுகள் தரித்து நிற்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. [வா]

## எமது நிலை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தோம். நாங்கள் பணத்தையோ வேறு மேலதிக கோரிக்கைகளையோ விடுக்கவில்லை எமது நிபந்தனைகள் மிகவும் குறைவானது இதுபோன்ற சம்பவங்கள் உலகத்தில் நடைபெற்றபோது கூடுதலான நிபந்தனைகள் விடுவிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன

எங்களிடம் சரணடைந்த பொலிசாரை சிப்பாய்களைவிட்டிருக்கிறோம். ஏன் இராணுவத்தினரி சடலங்களை கூட எதுவித நிபந்தனையுமின்றி மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் கொடுத்திருக்கிறோம். மனிதாபிமானமும் சிங்கள மக்கள் மேல்கொண்ட நல்லெண்ணத்தின் பேரிலுமே இவற்றை செயலில் காட்டினோம்.

### இராணுவ அதிகாரிகள் இடமாற்றம்

எங்கள் நிபந்தனையை ஏற்று எம்முடன் பேச்சுவார்த்தை நடத்திய யாழ் கோட்டை இராணுவ முகாம் கேர்ணல் ஆனந்தவீரசேகர கப்டன் கொத்தலாவல அவர்களுடன் கூட வந்த 10 சிப்பாய்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். இது அரசுக்குள் எழுந்த உட்பூசலால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்று நான் கருதுகிறேன்.

இவ்வாறு திரு. கிட்டு விஜ குழுவினர் பத்திரிகையாளர் கேட்ட கேள்விகளுக்கும் பதிலளிக்கையில் தெரிவித்தார். [மா]

## அனைத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பவதேரோ 'சுபாஷ் ஹோட்டலில் பத்திரிகையாளருக்களித்த பேட்டியின் போதுகுறிப்பிட்டார்.

அவர் தமது பேட்டியில் மேலும்: 'இனப்பிரச்னைக்கு ராணுவத் தீர்வொன்று காண முடியாது. அப்படி முடியுமானால் இதுவரையில் தீர்வைக் கண்டிருக்கலாம். அப்படிக் கண்டாலும் அது ஒரு இடைக்காலத் தீர்வாகவே இருக்கும் எனக் குறிப்பிட்டார்.

வவுனியாவில் தமது கடமை பற்றி வண. தேரோ குறிப்பிடுகையில் அங்கு நாளாந்தம் அப்பாவி மக்களை ராணுவத்தினர் கைது செய்து முகாம்கொண்டு செல்வதும் தான் பின்னர் அங்கு சென்று அவர்களை விடுதலை செய்வதுமாகவே உள்ளது எனக் கூறினார். தான் இதுவரை சுமார் 600-700 பேரை விடுதலை செய்துள்ளதாகவும் கூறினார்.

இரு சிப்பாய்களின் விடுதலை பற்றி தேரர் கருத்துத்தெரிவிக்கையில், இவர்களின் விடுதலைக்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்யவேண்டியது அரசின் பொறுப்பு எனக் கூறினார்.

## தவறு

யாழ்ப்பாணம், சனி

யா. பிரஜைகள் குழுவின் தலைவராக தான் தற்போது அங்கம் வகிக்காததால் தமிழ் பகுதி பிரஜைகள் குழுத்தலைவர்கள் இந்தியத் தூதுவர் திரு ஜே. என் டிக்ஸிற்றுடனான சந்திப்பில் தான் இடம்பெறமாட்டாரென பேராசிரியர் கா சிவத்தம்பி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்றைய ஈழநாட்டில் பேராசிரியர் கா சிவத்தம்பி யாழ பிரஜைகள் குழுசார்பில் சந்திப்பார் என்ற செய்தி தவறானது. [சி]

## இராணுவத்தை சந்திக்கும் விசேஷகுழு

வவுனியா, வெள்

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவும் வியாபார சங்கத்தாக்குழுவும் நாளை ஞாயிற்றுக் கிழமை வவுனியா மாவட்ட பாதுகாப்பு உயர் அதிகாரிகளை சந்திக்கவுள்ளதாக மேற்படி பிரஜைகள் குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வவுனியா நகரிலுள்ள வங்கி நடவடிக்கைகளை வார நாட்களில் தினமும் பகல் 12 மணி வரை திறந்திருக்க வேண்டிய தன் அவசியம்பற்றி பிரஜைகள்குழு இச் சந்திப்பின் போது பிரஸ்தாபிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி எலிசபெத் பொன்னையா

இளவாலை மாரீசன்கூடலைச் சேர்ந்த திருமதி எலிசபெத் பொன்னையா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற செ பொன்னையா ஆசிரியரின் மனைவியும், காலஞ்சென்ற S சூசைப்பிள்ளை ஆசிரியரின் சகோதரியும், புண்ணியவதி பேரின்பநாதன் (PHI பண்டத்தரிப்பு) அன்னரெட்டினம் (Italy). தேவரெட்டினம் [ஆசிரியை, சென் ஜேம்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்] ஆகியோரின் தாயாரும் நடராசா ஆசிரியர், சென். ஹென்றீஸ் கல்லூரி, இளவாலை], திருமதி ஜே பேரின்பநாதன [ஆசிரியை. மாங்குளம் ம வி ஜெயகோபி (Italy). J ஜெயானந்தன் (St Jude Industry கோப்பாய்] ஆகியோரின் மாமியாரும், மலர்விழி, சசிவர்ணன சங்கர். டயானா, ஜெயகாந்தன் ஆகியோரின் பாட்டியும் ஆவார் அன்னாரின் நல்லடக்கம் 7-ம் திகதி ஞாயிறு காலை 9-00 மணிக்கு இளவாலை அன்னம்மாள சேமக்காலையில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

C 6214) தகவல்: லோறன்ஸ்.

### திருமதி நாகேஸ்வரி செல்லப்பா

திருமதி நாகேஸ்வரி செல்லப்பா காலமானார் இவர் திரு. செல்லப்பா (இளைப்பாறிய சுகாதார பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும் பாலகௌரி (நைஜீரியா) தயாகௌரி (ஆசிரியை தெகிவளை தமிழ வித்தியாலயம்) ஜெயகௌரி ஆகியோரின் அருமைத்தாயாரும், மனோகரன் (நைஜீரியா) கணேஷானந்தகுரு, மகிந்தன் (நோர்வே) ஆகியோரின் மாமியாரும், ஜனகன், திலீபன், நிருபா, மயூரன், பிரனீதா, ஆகியோரின் பாட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் 45. சிவகுருநாதர் வீதி இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக இன்று (6-12-86) 4 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

அறிவிப்பாளர் நா. செல்லப்பா

(C 6215)

### சுப்பிரமணியம் சண்முகம் நாரந்தனை

நாரந்தனை, வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் சண்முகம் அவர்கள் சிவபதமடைந்து விட்டார்கள் இவர் காலம் சென்ற இளையபிள்ளையின் அன்புக் கணவரும், பரமேஸ்வரியின் அன்புத் தந்தையும். சிவலிங்கத்தின் (படவரைஞர் நிலஅளவை திணைக்களம்) அன்பு மாமனாரும், குணபாலன், சத்தியசீலன் (ஆசிரியர்), ஸ்ரீகௌரி, ஜெயதேவி [மாணவிகள் வேம்படி மகளிர் கல்லூரி], ஜெயசீலன், ஜெயபாலன் [மாணவர், (யாழ். மத்திய கல்லூரி], கோணேஸ்வரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலம்சென்ற மலாயன் பென்சனியர் வேலுப்பிள்ளை, காலம்சென்ற சிவத்திரை, காலம்சென்ற வைத்திலிங்கம் (ஆசிரியர்), ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 6-12-86 (சனிக்கிழமை) பிற்பகல் 2 மணிக்கு நாரந்தனை மயானத்தில் நடைபெறும்.

(C-6216) தகவல் S. சத்தியசீலன்

## மரண அறிவித்தல்

### நா. சுப்பிரமணியம் (சின்னத்துரை)

திரு. நா. சுப்பிரமணியம் (சின்னத்துரை) 5-12 86 அன்று காலமானார். இவர் திலகவதியின் அன்புக் கணவரும் சுசிலாதேவி, சுகுணாதேவி, ஜெயானந்தன், செல்வக்குமார், கலாதேவி வட்சலாதேவி, கோகிலா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார் ஈமக்கிரியைகள் 6-12 86 சனிக்கிழமை (இன்று மாலை 2-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெயானந்தன்.

'குமரவாசம்', 4ம் கட்டை,
கூழாவடி, ஆனைக்கோட்டை. (C6212)

### திருமதி பொன்னையா வள்ளியம்மை

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கோண்டாவில் வடக்கில் வசித்தவருமாகிய காலம்சென்ற ஆறுமுகம் பொன்னையாவின் அன்பு மனைவி வள்ளியம்மை காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற ஆறுமுகம், சிவக்கொழுந்து, முருகேசு, சோமசுந்தரம் (ஆசிரியர்) சுந்தரம் ஆகியோரின் அன்புத் தாயாரும். காலம் சென்ற தம்பிப்பிள்ளை, அன்னலெட்சுமி, செல்லம்மா, காலஞ்சென்ற தங்கம்மா, சிவகாமசுந்தரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் கோண்டாவில் மயானத்தில் 6-12-86 சனிக்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறும்.

(C 6217) தகவல்: பொ. முருகேசு.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram: Eelanadu Telephone: 22389—24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org